171
17 JUL 1957
TB 031(5)

தென்னாட்டு வாசகம்

ஐந்தாம் வகுப்பு

தென்னாட்டுப் பதிப்பகம்
சென்னை-1

BALU BROS

தென்னாட்டு வாசகம்

ஐந்தாம் வகுப்பு

171/3-57

ஆசிரியர்கள் :
புலவர். மா. நன்னன்
M. R. சந்திரசேகரன், B.A., L.T.

[Paper used : 34 lbs. White Printing]

தென்னாட்டுப் பதிப்பகம்
16, பிராட்வே : : சென்னை–1

பதிப்புரிமை] 1957 [விலை { அணா 11 / ந. பை. 69

முதற் பதிப்பு—அக்டோபர், 1956
இரண்டாம் பதிப்பு—ஏப்ரல், 1957

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part I-B of the
Fort St. George Gazette dated 10-4-1957, Page 3]

TB
031(59)
N57

133667

Kabeer Printing Works, Madras (3526)

முன்னுரை

'தென்னாட்டு வாசகம்' எனும் பெயரிய இப்பாட வரிசை அரசியலாரின் பாடத்திட்டத்தை முற்றிலும் தழுவி அமைக்கப்பட்டுள்ளது.

குழந்தையுள்ளத்தினியல்பு, குழந்தைகளின் இயல்பான கைத்திறன், இயற்கையறிவு, பொருளறிவு, மொழித்திறன் ஆகியவற்றை உட்கொண்டும், படிப்படியாகவும், இயல்புக்கு முரண்படாமலும், வளர்ச்சிக்கு வாய்ப்பளித்தும் இந்நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அறிந்தவற்றிலிருந்து அறியாதனவற்றிற்கு ஆர்வம் குன்றுமல் அழைத்துச் செல்லல் எனும் சீரிய இயல்பு முறையும் இந்நூல்களில் அமைந்திருத்தல் உணரக்கூடும்.

மொழிப் பாடத்தில் மொழியறிவுக்கு முதலிடமும் பொருளறிவு முதலிய பிறவற்றிற்கு அடுத்த அடுத்த இடங்களும் நல்குதல் இன்றியமையாதது. எனவே மொழிப் பாடத்தில் மொழிப் பயிற்சிகள் மிகுதியாகத் தரப்படுவது இன்றியமையாததாகும். இந்நூல்களில் பயிற்சிகள் வேண்டிய அளவு கொடுக்கப்படாமல் இயன்ற அளவே கொடுக்கப்பட்டுள்ளன. ஆதலின், கற்பிக்கும் ஆசிரியர்கள் அவை போன்ற வேறு பயிற்சிகளை மிகுதியாகக் கொடுத்தால் மொழிப் பாடத்தின் நோக்கம் முற்றிலும் ஈடேறுவது திண்ணம்.

நாங்கள் இருவரும் முறையே தமிழ் ஆசிரியராகவும், கணக்குத் தணிக்கையாளராகவும் அரசியல் அலுவலாளரா யிருந்தபோது இப்பாட வரிசை எழுதப்பட்டது. இவ் வரிசை அரசினர் வெளியீடல்ல.

ஆசிரியர்கள்.

பொருளடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தாய்மொழி	...	1
2.	திருவள்ளுவர்	...	3
3.	நூல் நிலையம்	...	6
4.	சேரிடம் அறிந்து சேர்	...	10
5.	நிலக்கரி	...	14
6.	மழை	...	17
7.	மழை (பாட்டு)	...	20
8.	பருவத்தே பயிர் செய்	...	21
9.	அறிவுக் கடல்	...	24
10.	கடிதங்கள்	...	27
11.	ஏட்டுச் சுரைக்காய்	...	31
12.	காகம் பாம்பைக் கொன்றது (பாட்டு)	...	34
13.	தந்தையைக் காத்த தனயன்	...	36
14.	ஊன் உண்ணும் செடிகள்	...	40
15.	பொன் விழா	...	43
16.	தொண்டர் படை	...	47
17.	உழைப்பால் உயர்ந்தோர்	...	51
18.	குரங்கும் குருவியும் (பாட்டு)	...	55
19.	முயலின் வெற்றி	...	57
20.	நீலகிரி	...	61
21.	மருத்துவ மனை	...	65
22.	சிறுர் பொறுப்பு (பாட்டு)	...	69
23.	கடல் வளம்	...	70
24.	சட்ட சபை	...	73
25.	உயிர்க் கொடை	...	76
26.	கள்ளக் குள்ளன் (பாட்டு)	...	80
27.	கள்வன் யார் ?	...	82
	செய்யுட் பகுதி	...	86

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனை கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி.

ஐந்தாம் வகுப்பு

1. தாய்மொழி

மாணவர்களே ! ஒரு தாய் தன் குழந்தைக்கு முதன் முதலில் எம் மொழியில் பேசக் கற்றுத் தருகிருளோ அம் மொழியே அக்குழந்தைக்குத் தாய்மொழி எனப்படும். தாய் கற்பிக்கும் மொழி தாய் மொழி அல்லது நம்மைப் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பவளே நமது தாய் என்பது போல, நமது அறிவை வளர்க்க உதவும் மொழியை நமது தாய் மொழி என்கிருேம் என்பதும் பொருந்தும். நமது தாய் நாம் சிறு குழந்தையாய் இருந்த பொழுது நமக்குக் கற்பித்த மொழி எது? தமிழல்லவா? ஆகவே தமிழ் மொழியே நமக்குத் தாய் மொழியாகும்.

நமது தாய்மொழியாகிய தமிழ் எத்தனையோ ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றியதாகும். அது தோன்றிய காலத்தை எவராலும் கண்டு பிடிக்க இயலவில்லை. அதனேடும், அதற்குப் பிறகும் தோன்றிய எத்தனையோ மொழிகள் மறைந்து விட்டன. நமது தமிழ் தோன்றிய காலத்திலேயே தோன்றிய மொழிகளில் ஒருசில தான் இப்போதும் இருக்கின்றன. ஆனல் அவைகளைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் யாரும் இல்லாததால் அவையும் பெரும்பாலும் அழிந்து போன மொழிகளாகவே எண்ணப்படுகின்றன.

தமிழ் மிக மிகத் தொன்மை வாய்ந்த மொழியென்றும் இக்காலத்திலும் வாழ்கின்ற மொழியென்றும் அறிந்த நாம், அது மிகவும் இனிமையான மொழி என்பதையும் உணர வேண்டும். நமது மொழியின் பெயராகிய தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்பது பொருளாகும். நீங்கள் பெரியவர்களான பின் வேறு மொழிகளையும் படிப்பீர்கள். அப்போது அவைகளை யெல்லாம்விட நமது தமிழ் மிகவும் இனிமை வாய்ந்திருப்பதை உணர்வீர்கள்.

தமிழ் மிக்க இனிய மொழியாய் இருப்பதற்குப் பல

காரணங்களுண்டு. அவற்றில் முதன்மையான காரணம் தமிழில் பல சிறந்த இலக்கியங்கள் இருப்பதேயாகும். உலகத்தில் வேறு எம் மொழியிலும் இல்லாத மிகவும் சிறந்த நூல் நமது மொழியிலுள்ள திருக்குறள் என்னும் நூலாகும். மற்றும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், இராமாயணம் முதலிய பல நூல்களும் தமிழில் உள்ளன. அவற்றையெல்லாம் நீங்கள் மேல்வகுப்புகளில் படிப்பீர்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நமது தாய் மொழியைப் போற்றிவளர்த்தல் நமது முதற்கடமையாகும். நாம் அழிந்தாலும் நமது மொழியை அழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்களாகிய நீங்கள் நிறைய நூல்களைப் படிக்கவேண்டும். பேசும்போதும் எழுதும்போதும் அழகாகவும், திருத்தமாகவும் பேசவும் எழுதவும் வேண்டும். இதுவே நீங்கள் தமிழ்மொழிக்குச் செய்யும் தொண்டாகும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. நமது தாய் மொழி எது? அதனைத் தாய் மொழி என ஏன் கூறுகிறோம்?
2. தமிழ் மொழியின் சிறப்புகள் யாவை?
3. தமிழ் மிக்க இனிய மொழியாயிருப்பதற்குக் காரணம் யாது?
4. தமிழ் மொழியிலுள்ள இலக்கியங்கள் சில கூறு.
5. தமிழ் மொழிக்கு நீங்கள் செய்ய வேண்டிய தொண்டு என்ன?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

பாலூட்டிச் சீராட்டி, தோன்றியது, பெரும்பாலும், தொன்மை, உணர்வீர்கள்.

3. பிரித்து எழுது :

முதன்முதலில், குழந்தையாயிருந்த, தாய்மொழியாகும், மொழிகளாகவே.

4. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாக அதே பொருளைத் தரும் வேறு சொற்களை எழுது :

1. **தாய் கற்பிக்கும்** மொழியே தாய் மொழி.
2. **எவராலும்** கண்டு பிடிக்க **இயலவில்லை.**
3. தமிழ் மிகமிகத் **தொன்மை வாய்ந்த** மொழி.
4. தமிழ் இனிய மொழி என்பதை **உணரவேண்டும்.**
5. **இத்தகைய சிறப்பு** வாய்ந்தது நமது மொழி.

2. திருவள்ளுவர்

திருவள்ளுவரைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருப் பீர்கள். அவரால் இயற்றப்பட்ட ஒப்பற்ற நூல் திருக் குறளாகும். கிறித்தவர்களுக்குப் பைபிள் என்னும் நூலும், முகம்மதியர்களுக்கு குரான் என்னும் நூலும் வேதங்களாக இருப்பதைப் போன்று தமிழர்களாகிய நமக்குத் திருக்குறளே வேதமாகும். அதனுற்ருன் அத ஊத் ' தமிழ்மறை ' என்கிருேம்.

திருவள்ளுவரின் பிறப்பைப் பற்றியும், அவரது வரலாற்றைப் பற்றியும் பலவிதமான கதைகள் வழங்கு கின்றன. ஆதி என்ற தாய்க்கும், பகவன் என்ற தந்தைக்கும் பிறந்தவர் திருவள்ளுவர் என்றும், இவ ருடன் கபிலர், ஔவை முதலிய ஏழுபேர் பிறந்தனர் என்றும் கூறுவதுண்டு. ஆயினும், இக் கதைக்குச் சரியான ஆதாரம் இல்லாததோடு, இது பொருத்தமான தாகவும் இல்லாததால் இதனைத் தமிழறிஞர்கள் உண்மை என்று நம்புவதில்லை. எனவே, திருவள்ளுவரைப்பற்றிய உண்மை வரலாறு எதுவும் கிடைக்கவில்லை என்பதே சரியானதாகும்.

ஆனல், அவரால் எழுதப்பட்ட திருக்குறளிலிருந்து அவர் ஒரு தலைசிறந்த அறிஞர் என்பது தெரிகிறது. சாதி, மத வேறுபாடுகள் எதுவும் அவருக்கு இருந்ததாகத் தெரியவில்லை. எல்லா மதத்தவருக்கும், எல்லா நாட்டவ ருக்கும், எல்லா இனத்தவருக்கும் பொதுவான நீதிகளையே அவர் கூறியுள்ளார். உழவுத் தொழிலிலிருந்து, நாட்டை யாளும் அரசுத் தொழில்வரை எல்லாவகையான அறிவும் அவருக்கு இருந்ததனல்தான் திருக்குறளில் மக்களுக்கு வேண்டிய எல்லாக் கருத்துகளையும் அவரால் கூற முடிந் தது. திருக்குறளில் கூறப்படாத கருத்து எதுவுமே இல்லையெனலாம்.

கடைத்தெருவில் பலவிதமான கடைகள் இருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். ஒரு கடையில் துணிகள் மட்டும் இருக்கும். இன்னொரு கடையில் பழங்கள்

இருக்கும். வேருெரு கடையில் இரும்புப் பொருள்கள் கிடைக்கும். மற்ருெரு கடையில் பித்தளை, செம்பு முத லியவற்ருலான பாத்திரங்கள் விற்கப்படும். பிறிதொரு கடையில் மிளகாய், புளி முதலிய உணவுப் பண்டங்கள் கிடைக்கும். அவ்வாறே நூல்களிலும் பலவகையுண்டு. ஒவ்வொரு நூலிலும் ஒன்றிரண்டு கருத்துகள் மட்டுமே



கூறப்பட்டிருக்கும். ஆனல் நமது அரும்பெருஞ் செல்வ மாகிய திருக்குறளோவெனில், எல்லாவிதமான பொருள் களும் விற்கப்படும் கடையைப்போல், மக்கள் வாழ்க் கைக்கு வேண்டிய எல்லாவகையான கருத்துகளையும் கொண்டதாக விளங்குகிறது.

திருக்குறளை ஆங்கிலம் முதலிய பல வெளிநாட்டு மொழிகளிலும் மொழிபெயர்த்து எல்லா நாட்டவரும், எல்லா மதத்தவரும் படித்துப் பயனடைகிருர்கள். திருக் குறளைப் படித்த வெளிநாட்டறிஞர்கள் அனைவரும் இதனைப் போன்ற ஒரு நூல் உலகத்தில் வேறு எங்கும் இல்லை என்று வியந்து பாராட்டியுள்ளனர். திருவள்ளு

வரைப்பற்றி நம்மால் ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லையாயினும், அவரது பெரு நூலாகிய திருக்குறளைப் பற்றியாவது நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? திருக்குறளைப் படிக்காதவனும் தமிழனுவானு? எனவே, நாம் அனைவரும் நமது மறை நூலாகிய திருக்குறளைக் கற்போமாக; கற்று அதன்படி ஒழுகுவோமாக. அவ்வாறு செய்தால் நாம் உலகில் தலைசிறந்த மக்களாகத் திகழ்வது உறுதி. திருக்குறளறிவு உயர்க; திருவள்ளுவர் புகழ் ஓங்குக.

பயிற்சி

1. விடை எழுது :

1. திருக்குறளை இயற்றியவர் யார்?
2. திருக்குறளை ஏன் 'தமிழ்மறை' என்கிறோம்?
3. திருவள்ளுவர் ஒரு தலைசிறந்த அறிஞர் என்று எவ்வாறு அறிகிறோம்?
4. மற்ற நூல்களில் காணப்படாத தனிச் சிறப்பு திருக்குறளில் என்ன உள்ளது?
5. மேனாட்டறிஞர்கள் ஏன் திருக்குறளைச் சிறப்பிக்கின்றனர்?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :
ஒப்பற்ற, தலைசிறந்த, அரும்பெருஞ் செல்வம், பாராட்டி, திகழ்வது.

3. இன்னொரு, வேறொரு, மற்றொரு, பிறிதொரு—இந்நான்கு சொற்களுக்கும் பொருள் ஒன்றே. இவ்வாறு ஒரே பொருளில் வரும் சொற்கள் சிலவற்றைக் கூறு.

4. தமிழ் எழுத்துகளை நான்கு வகையாகப் பிரித்துள்ளனர். அவை :

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ—இப்பன்னிரண்டு எழுத்துகளையும் **உயிர் எழுத்துகள்** என்று கூறுவர்.

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்—இப்பதினெட்டு எழுத்துகளுக்கும் **மெய்யெழுத்துகள்** என்று பெயர்.

க முதல் னௌ வரை உள்ள 216 எழுத்துகளுக்கும் **உயிர் மெய் எழுத்துகள்** என்று பெயர்.

ஃ—இதற்கு **ஆய்த எழுத்து** என்று பெயர்.

ஆகவே, தமிழ் எழுத்துகள் மொத்தம் 247. அவை உயிர் எழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய் எழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகைப்படும்.

3. நூல் நிலையம்

நாம் புத்தகங்களைப் படிப்பது ஏன்? நமது அறிவை வளர்த்துக் கொள்வதற்காக அல்லவா? மணற்கேணியைத் தோண்டத் தோண்ட எவ்வாறு நீர் அதிகமாக ஊறுமோ அவ்வாறே நூல்களைக் கற்கக் கற்கத்தான் அறிவு வளர்ச்சி யடையும். இத்தகைய பரந்த அறிவினைப் பெற பலதிறப் பட்ட பொருள்களைப் பற்றியும் நாம் படித்தறிய வேண் டும். பாடப் புத்தகங்களை மட்டும் படிப்பதன் மூலம் நமக்குத் தேவையான எல்லாப் பொருள்களைப் பற்றியும் அறிந்துகொள்ள இயலுமா? இயலாது என்றே கூறலாம். ஏனெனில் பாடப் புத்தகங்களில் ஒரு சில கருத்துகளே அடங்கியிருக்கும். எனவே, பாட நூல்கள் தவிர பிற நூல்கள் பலவும் படிக்க வேண்டிய தேவையேற்படுகிறது. அப்போதுதான் பல பொருள்களைப் பற்றியும், அறிஞர் களின் புதுப்புது ஆராய்ச்சிகளைப் பற்றியும் அறிந்து நமது பொது அறிவை வளர்த்துக் கொள்ள முடியும். ஆனால் அந் நூல்களனைத்தையும் ஒவ்வொருவரும் விலை கொடுத்து வாங்கிப் படிக்க முடியுமா? முடியாதல்லவா? இக் குறையைத் தவிர்க்கவே நூல் நிலையங்கள் ஏற்பட் டுள்ளன.

நூல் நிலையத்தில் அறிவியல், அரசியல், கலை, இலக் கியம், கவிதை, கதை, முதலிய பலவகைப்பட்ட புத்தகங் களும் இருக்கும். அவரவர் தத்தம் விருப்பத்திற்கும், தேவைக்கும் ஏற்ற நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படிக்க லாம். ஆங்காங்கு நூல் நிலையங்கள் நிறுவி மக்களுக்குப் பயன்படுமாறு செய்ய அரசினர் தற்போது அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்; ஒவ்வொரு மாவட்டத்திலும் பொது நூல் நிலையத்தை ஏற்படுத்தியுள்ளனர்; கிராமங் களில் கிளை நூல் நிலையங்களையும் நிறுவியுள்ளனர். சென்னையிலுள்ள கன்னிமரா நூல் நிலையமும், பல்கலைக் கழக நூல் நிலையமும் பெரியவை; பழமை வாய்ந்தவை.

சில இடங்களில் தற்காலத்தில் மோட்டார் வண்டி களில் நூல் நிலையம் அமைத்துப் பல கிராமங்களுக்கு

வண்டிகளை ஓட்டிச் சென்று, புத்தகங்களை வழங்கவும், திரும்பி வாங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம் முறையைத் தஞ்சை மாவட்டக் கழகம் பின்பற்றி வருகிறது.

மாணவர்கள் தம் ஓய்வு நேரங்களில் பல்வேறு நூல்களைப் படித்துத் தம் பொது அறிவைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு, பள்ளிகளிலும் நூல் நிலையங்கள் உள்ளன. பள்ளி நூல்நிலையத்தைக் கண்காணிக்கும்



பொறுப்பு பாடசாலை ஆசிரியர் ஒருவரிடம் இருக்கும். அப்பொறுப்பாளர், நூல் நிலையத்திலுள்ள நூல்களனைத்தையும் கவனித்துக் கொள்வார்; புத்தகங்களின் பெயர்களைப் பட்டியல்களில் எழுதி வைப்பார்; மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களைக் கொடுப்பதையும், வாங்குவதையும் குறித்து வைப்பார்.

மாணவர்கள், நூல் நிலையத்தைப் பெரிதும் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். நூல் நிலையத்தில் அமர்ந்து படிக்கும்போது, மற்றவர்களுக்கு இடையூறு ஏற்படாமல்

கவனித்துக் கொள்ள வேண்டும். மௌனமாகப் படித்துக் கருத்துகளை உணரும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும். புத்தகங்களை வாங்கும்போதும், அவற்றைத் திருப்பித் தரும்போதும் வரிசையில் சென்று ஒழுங்கு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும். நூல் நிலையத்தி லுள்ள புத்தகங்கள் பலரும் படிக்கவேண்டியவை ஆத லால் அவை கிழிந்து விடாமலும், அழுக்கடையாமலும் நாம் கவனித்துக் கொள்ள வேண்டும். புத்தகங்களில் கிறுக்குவதும், நமது சொந்தக் கருத்துகளை எழுதி வைப்பதும் தவறான செயல்களாகும். புத்தகங்களைப் படிக்கும்போதும், அவற்றில் காணப்படும் அரிய கருத்து களை ஒரு தனிக் குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்தல் நலம். அவ்வாறு செய்யின் நமக்குத் தேவையானபோது அக்கருத்துகளைப் பயன்படுத்திக் கொள்ள இயலும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. பாட நூல்களைத் தவிர பிற நூல்களையும் ஏன் படிக்க வேண்டும்?
2. நூல் நிலையங்கள் ஏன் ஏற்படுத்தப்படுகின்றன?
3. சென்னையிலுள்ள பெரும் நூல் நிலையங்கள் யாவை?
4. நூல் நிலையங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?
5. உனது பள்ளி நூல் நிலையத்தைப் பற்றி ஐந்து தொடர் கள் எழுது.

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

பலதிறப்பட்ட, தவிர்க்க, தேர்ந்தெடுத்து, பின்பற்றி, கண்காணிப்பு, இடையூறு.

3. கீழ்க்காணும் தொடர்களைத் தக்க சொற்களை எழுதி முடி :

1. நாம் புத்தகங்களைப் படிப்பது...........
2. நாம் நம் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற நூல்களை......

3. மாணவர்கள் தங்களுக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம்......

4. நூல் நிலையத்தில் உட்கார்ந்து படிக்கும்போது......

5. நல்ல கருத்துக்களைக் குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்தால்......

4. பூ, காய், மரம், நால்வர், வந்தனர், வந்தார்கள்—இவை அனைத்தும் சொற்கள் எனப்படும்.

ஓர் எழுத்து தனியாகவேனும், இரண்டு முதலிய பல எழுத்துகள் சேர்ந்தேனும் ஒரு பொருளைத் தருமாயின், அதற்குச் **சொல்** என்று பெயர்.

சொற்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? சொற்கள் நான்கு வகைப்படும். அவை: பெயர்ச்சொல், **வினைச்சொல்**, **இடைச்சொல்**, **உரிச்சொல்** என்பனவாம்.

பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையும் நீங்கள் கீழ் வகுப்புகளில் கற்றீர்கள். மற்ற இரண்டையும் பற்றி மேல் வகுப்புகளில் கற்கலாம்.

இப்பாடத்திலிருந்து பத்து பெயர்ச்சொற்களையும் பத்து வினைச்சொற்களையும் எடுத்து எழுது.

4. சேரிடம் அறிந்து சேர்

ஒரு காட்டில் ஒரு சிங்கம் இருந்தது. அது நரி, புலி, காகம் ஆகிய மூன்றையும் தனக்கு மந்திரிகளாக வைத்துக்கொண்டு அரசாட்சி செய்து வந்தது. ஒரு நாள் ஒட்டகம் ஒன்று வழி தவறி அக்காட்டிற்கு வந்து விட்டது. அதைக் கண்ட காக்கை, "நீ யார்?" என்று கேட்டது. ஒட்டகம், "நான் வழி தவறி இங்கு வந்துவிட்டேன்" என்றது. பிறகு காக்கை ஒட்டகத்தைத் தன்னுடன் அழைத்துச் சென்று, தன்னுடைய அரசனாகிய சிங்கத்தினிடம் அதைப்பற்றிச் சொல்லிற்று. அதைக் கேட்ட சிங்க அரசன், "சரி மிக்க மகிழ்ச்சி. இன்று முதல் நீயும் என் மந்திரியாக இரு" என்று கூறி ஒட்டகத்தையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டது.

சிறிது காலத்திற்குப் பிறகு ஒரு நாள் சிங்கத்தின் உடல் நலம் கெட்டுவிட்டது. அதனால் இரை தேடப் போகமுடியவில்லை. ஆனால் பசி குடலைப் பிடுங்குவது போல் இருந்தது. எனவே, அது தன்னுடைய நான்கு மந்திரிகளையும் அழைத்து, "மந்திரிகளே! எனக்கு இன்று உடல் நலம் குன்றியிருக்கிறது. என்னால் இரை தேட முடியவில்லை. நீங்கள் நால்வரும் சென்று, இரை தேடி வாருங்கள். நான் உண்டதுபோக எஞ்சியதை நீங்களும் உண்ணலாம்" என்றது. அதைக் கேட்ட நான்கு மந்திரிகளும் இரைதேடப் புறப்பட்டன.

அவை காடு முழுதும் அலைந்தன. இரை எதுவும் அகப்படவில்லை. இரை இல்லாமல் சென்றால் சிங்கம் தங்களையே அடித்துத் தின்றுவிடுமே என்று அவை அஞ்சின. என்ன செய்வதென்று தெரியாமல் விழித்தன. கடைசியில் ஒட்டகத்தை வேறு வேலையாகத் தொலைவில் அனுப்பிவிட்டு நரி, புலி, காகம் ஆகிய மூன்றும் சேர்ந்து சூழ்ச்சியாகத் திட்டமிட்டன.

அப்போது காகம், "ஒட்டகத்தைக் கொன்று நம் அரசனுக்குக் கொடுத்து விடலாம். அவன் நம்மைப் போல இறைச்சி உண்பவனல்லவே, தழையும், புல்லும்

தின்பவனல்லவா? அவனால் நமக்கு என்ன பயன்'' என்றது.

அதைக் கேட்ட புலி, ''நமது அரசன் ஒட்டகத்தை ஆதரிப்பதால் நாம் அவனைக் கொல்வது தவறாகும்'' என்றது.

பிறகு நரி ''இதற்கெல்லாம் நான் ஒரு வழி செய்கிறேன்'' என்று கூறித் தனியே சிங்கத்தினிடம் சென்றது.

நரி சிங்கத்தைப் பார்த்து ''அரசே! எங்கு தேடியும் இரை அகப்படவில்லை. வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவதுபோல், இரையை வைத்துக் கொண்டு வீணாக இவ்வளவு நேரம் காட்டில் அலைந்து விட்டோம். நம்முடன் இருக்கும் ஒட்டகத்தை நாம் மறந்தே போய்விட்டோம்'' என்று சொல்லிக்கொண்டிருக்கையில் சிங்கம் ''சிவ சிவா! அடைக்கலமாக ஏற்றுக்கொண்டவனைக் கொலை செய்யலாமா?'' என்றது.

அதைக் கேட்ட நரி ''தாங்கள் கொல்ல வேண்டாம். ஒட்டகமே தன்னைக் கொன்று தின்னுங்கள் என்று கூறும். அப்போது அதனை நாங்கள் அடித்துக் கொன்று தங்களுக்குத் தருகிறோம்'' என்றது. அதற்குச் சிங்கம் ஒன்றும் பதில் சொல்லாமல் இருந்துவிட்டது.

உடனே நரி, காகத்தையும் புலியையும் சந்தித்து இரகசியமாகப் பேசி, ஏதோ ஒரு திட்டமிட்டுக்கொண்டது. பின்னர் அவை மூன்றும் ஒட்டகத்தையும் அழைத்துக் கொண்டு சிங்கத்திடம் சென்றன. சென்றவுடன் காக்கை சிங்கத்தைப் பார்த்து, ''அரசே! இன்று தங்களுக்கு இரை ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனாலும் தாங்கள் பசியுடன் இருத்தலாகாது. என்னை உண்டு பசி தணியுங்கள்'' என்றது. ''சீ! நீ எம்மாத்திரம். என் கடைவாய்க்குக் கூட போதமாட்டாய். உன்னைத் தின்றால் என் பசி தணியுமா?'' என்று சிங்கம் சினத்துடன் கூறியது.

பிறகு நரி ''ஐயனே! என்னையாவது உண்டு பசியாறலாகாதா?'' என்று பணிவுடன் உரைத்தது.

"உன்னைத் தின்றாலும் என் பசி தீராது" என்று சிங்கம் பதில் கூறிவிட்டது.

அடுத்த படியாகப் புலி "நான் அவர்களைவிடப் பெரியவன். எனவே, என்னையாவது தின்றருள

வேண்டும்" என்று வேண்டிக் கொண்டது. "நீ மட்டும் மிகவும் பெரியவன் என்பது உன் எண்ணமோ?" என்றுரைத்து அதனையும் மறுத்துவிட்டது சிங்கம்.

இறுதியாக ஒட்டகம், "அரசர் பெருமானே! நான் அவர்கள் எல்லோரினும் பெரியவன். ஆதலால் தாங்கள் என்னை உண்டால் தங்கள் பசி தீருவது உறுதி" என்றது. உடனே புலி, ஒட்டகத்தின்மேல் பாய்ந்து அதனை அடித்துக் கொன்றது. இறந்த ஒட்டகத்தைச் சிங்கம் தின்று களித்தது. எஞ்சியதை மற்ற மூன்று மந்திரிகளும் உண்டு மகிழ்ந்தன.

ஒட்டகம் சேரத்தகாத இடத்தில் சேர்ந்தது. அதனால் தாங்க முடியாத துன்பத்தை அடைந்து மாண்டது.

பயிற்சி

1. விடை எழுது :

1. சிங்கத்தின் மந்திரிகள் யாவர்? ஒட்டகம் ஏன் அவற்றுடன் சேர்ந்தது?

2. ஒட்டகத்தைக் கொல்ல மற்ற மூன்று மந்திரிகளும் ஏன் சூழ்ச்சி செய்தன? என்ன சூழ்ச்சி செய்தன?

3. சிங்கம் முதலில் ஏன் ஒட்டகத்தைக் கொல்ல மறுத்தது?

4. காகம், நரி, புலி ஆகியவற்றைச் சிங்கம் ஏன் கொன்று தின்ன மறுத்தது?

5. ஒட்டகம் செய்த தவறு என்ன? அதன் முடிவு என்ன?

2. எதிர்ச்சொற்கள் எழுது :

தவறி, மகிழ்ச்சி, சேர்த்துக்கொண்டது, சென்று, தவறுகும்.

3. பிரித்து எழுது :

சொல்லிக்கொண்டிருக்கையில், திட்டமிட்டது, இரையொன்றும், இருத்தலாகாது, தின்றருளவேண்டும்.

4. கீழுள்ள சொற்களைக் கவனி :

கிளி, ஊர், இரவு, வாய், நன்மை, நடத்தல்—இவை ஆறும் பெயர்ச்சொற்கள் தான். எனினும் இவைகளுக்கிடையில் உள்ள வேறுபாடுகளைக் கவனி.

கிளி—இது ஒரு பொருளின் பெயர்.

ஊர்—இது ஒரு இடத்தின் பெயர்.

இரவு—இது ஒரு காலத்தின் பெயர்.

வாய்—இது ஒரு சினையின் (உறுப்பின்) பெயர்.

நன்மை—இது ஒரு குணத்தின் பெயர்.

நடத்தல்—இது ஒரு தொழிலின் பெயர்.

இவற்றை முறையே **பொருட் பெயர், இடப் பெயர், காலப் பெயர், சினைப் பெயர், குணப் பெயர், தொழிற் பெயர்** என்று கூறலாம்.

கீழுள்ளவற்றில் பொருத்த மற்றவைகளை அடித்துவிடு :

1. பொருட் பெயர் : மரம், மக்கள், பகல், கை, பெண்.
2. இடப் பெயர் : பள்ளிக்கூடம், உண்ணுதல், நாடு, தலை, கிராமம்.
3. காலப் பெயர் : நாள், மாதம், வண்டி, சித்திரை, நாழி.
4. சினைப் பெயர் : விரல், இலை, மாலை, கிளை, வால்.
5. குணப் பெயர் : கருமை, வெண்மை, காகம், தீமை, பல், வருதல்.
6. தொழிற் பெயர் : ஓடுதல், எழுதுதல், உண்டான், கழுத்து, மாவட்டம்.

5. நிலக்கரி

இயற்கையன்னை மக்களுக்கு வழங்கும் முக்கிய மான பொருள்களில் நானும் ஒருவன். நானும் என் நண்பன் இரும்பும் சேர்ந்து இந்த உலகத்தையே தொழில் உலகமாக மாற்றி விட்டோம் என்றால் எங்கள் பெருமையை உங்களால் அளவிட்டுக் கூறமுடியுமா? எங்கு பார்த்தாலும் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன. அவையனைத்தும் எங்கள் உதவியினாலேயே இயங்குகின்றன. நீராவி இயந்திரங்களை இயக்குவதற்கு எங்கள் உதவியைத்தான் எதிர்பார்க்க வேண்டும். இவ்வளவு சிறப்புகளும் உடைய என் பெயர் நிலக்கரி.

என்னைப் பூமியின் அடியிலிருந்து வெட்டி எடுக்கிறார்கள். சில இடங்களில் பூமியின் அடியில் நான் தொடர்ந்தாற் போல் இருப்பேன். அவ்விடங்களை நிலக்கரிப் படுகைகள் என்று கூறுவர். அங்கு சுரங்கங்கள் வெட்டி என்னை எடுக்கிறார்கள்.

ஆயிரக் கணக்கான ஆண்டுகட்கு முன் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பூமியில் பெரும் பிளவுகள் ஏற்பட்டு அவற்றில் மரங்களடர்ந்த காடுகள் புதைந்து விட்டன வென்றும், மண்ணின் அழுத்தத்தினால் அம்மரங்கள் நாளடைவில் உருமாறி நாங்கள் தோன்றியிருக்கக் கூடுமென்றும் அறிஞர்கள் கருதுகின்றனர்.

எங்கள் இனத்தில் இரு வகையுண்டு. ஒரு பிரிவினர் எரிந்தால் மிகுந்த புகையைத்தான் உண்டாக்குவார்கள். மற்றொரு பிரிவினர் எரிந்தால் மிகுந்த அனலை உண்டாக்குவார்கள். இரண்டாம் வகையைச் சேர்ந்த எங்கள் இனத்தாரைத் தான் புகைவண்டியில் உள்ளதுபோன்ற நீராவி இயந்திரங்களில் பயன்படுத்துகிறார்கள். ஏனெனில் அவர்களால்தான் அதிக வெப்பத்தைத் தர இயலும்.

எங்களிடமிருந்து தார், பினைல் போன்ற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. இரும்பைக் காய்ச்சி உருக்கவும் நாங்கள் பயன்படுகிறோம். சாயங்கள் கூட எங்கள் மூலம் இறக்கப்படுகின்றன. விளக்குகள் சில எங்கள் உதவியால்

எரிகின்றன. நாங்கள் உலகத்திற்கு எவ்வளவு பயன்படு கிறோம் என்பதை இப்போது உணர்கிறீர்களா? இதனாலேயே நாங்கள் எந்த நாட்டில் அதிகமாகக் கிடைக்கிறோமோ அந்நாட்டினைச் 'செல்வ நாடு' என்று கூறுகின்றனர்.

நாங்கள் அமெரிக்காவில் அதிகமாகக் கிடைக்கிறோம். இந்தியாவில் தாமோதர் நதிப் பள்ளத்தாக்கில் அதிகமாகக் காணப்படுகிறோம். அங்கு எங்களை எடுக்கப் பெரிய பெரிய சுரங்கங்கள் உள்ளன. ஐதராபாத்தில் கூட எங்களுக்கென்று சுரங்கம் ஒன்று இருக்கிறது. தென்னிந்தியாவில் தென்னார்க்காடு மாவட்டத்தில் நெய்வேலி என்னுமிடத்திலும் எங்கள் இனத்தவர் இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இங்கு காணப்படும் வகையினர் சற்று பழுப்பு நிறமாய் இருக்கிறார்கள். ஆகவே இவ்வகையினரைப் 'பழுப்பு நிலக்கரி' என்று அழைக்கிறார்கள். நெய்வேலியில் நிலக்கரி நூறு சதுர மைலுக்குப் பரந்து கிடக்கிறது. தமிழ் நாட்டிற்கு ஏறத்தாழ நானூறு ஆண்டுகளுக்குத் தேவையான அளவு எங்கள் இனத்தவர் நெய்வேலிச் சுரங்கத்தில் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இது தமிழ் நாட்டிற்கே பெருஞ் செல்வம் போன்றதல்லவா? எங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டால் தமிழ் நாடு தொழில் துறையில் சிறந்து விளங்கும் என்பதில் ஐயமுண்டோ?

பயிற்சி

1. விடை எழுது :

1. நிலக்கரிப் படுகைகள் என்றால் என்ன?
2. நிலக்கரி எவ்வாறு தோன்றுகிறது?
3. இருவகை நிலக்கரிகள் யாவை? நீராவி இயந்திரங்களுக்குப் பயன்படும் வகை எது?
4. செல்வ நாடு என்று எதனைக் கூறுகின்றனர்? ஏன்?
5. நெய்வேலிச் சுரங்கத்தில் எவ்வகை நிலக்கரி கிடைக்கும்?
6. நிலக்கரி நமக்கு எந்தெந்த வகைகளில் பயன்படும்?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

அளவிட்டுக் கூற, இயங்குகின்றன, சிறப்புகள், பயன் படுத்து, ஏறத்தாழ.

3. சேர்த்து எழுது :

இயற்கை	+ அன்னை	பூமியின்	+ அடியில்
மரங்கள்	+ அடர்ந்த	சுரங்கங்கள்	+ உள்ளன
ஒன்று	+ இருக்கிறது	என்பதில்	+ ஐயமுண்டோ

4. எதிர்ச் சொற்கள் எழுது :

வழங்கும், பெருமை, தொடர்ந்து, பெரும், மாறி, வெப்பம், செல்வ நாடு, பரந்து.

5. கீழே இரு பிரிவாக உள்ள வினைச் சொற்களைக் கவனி. அவைகளுள் காணப்படும் வேறுபாட்டையும் அறிந்து கொள்.

படித்தேன்	படிப்பித்தேன்
அடித்தேன்	அடிப்பித்தேன்
வந்தான்	வருவித்தான்
ஓடினாய்	ஓட்டினாய்

முதற்பிரிவில் உள்ளவை, ஒருவர் தாமே செய்யும் வினைகள். இரண்டாம் பிரிவில் உள்ளவை, ஒருவர் பிறரைக் கொண்டு செய்விக்கும் வினைகள். ஆகவே, இவற்றை முறையே **தன்வினை** என்றும், **பிறவினை** என்றும் கூறலாம்.

ஒருவர் தாமே செய்வது தன்வினை. பிறரைக்கொண்டு செய்விப்பது பிறவினை.

6. மழை

"மாரி யல்லது காரிய மில்லை" என்னும் பழமொழியை நீங்கள் படித்திருக்கிறீர்களா? இதன் கருத்து என்ன? மழையில்லையெனில் இவ்வுலகில் எக்காரியமும் நடைபெற இயலாது. ஏனென்றால் மழை பெய்யாவிட்டால் உலகில் புல் பூண்டுகள்கூட இருக்க மாட்டா. அதனால் நமக்குத் தேவையான உணவு கிடைக்காமற் போய்விடும். ஆறு, ஏரி, கிணறு முதலிய நீர் நிலைகளும் வறண்டு, குடிநீரும் இல்லாமற் போகும். உண்ண உணவும், குடிக்க நீரும் இல்லாமல் உலகில் உயிர் வாழ்தல் இயலாதல்லவா?

ஒரு நாட்டின் சிறப்பினைக் கூறும்போது அதனுடைய நீர் வளத்தையும், நில வளத்தையும் குறிப்பிடுவது வழக்கம். நீர்வளம் இன்றி நிலவளம் எங்ஙனம் ஏற்படும்? நீர்வளத்திற்கு இன்றியமையாதது மழைதான். இத்தகைய சிறப்பும் முக்கியமும் வாய்ந்த மழை எவ்வாறு பெய்கிறது என்று கவனிப்போம்.

உங்கள் வீட்டில் அடுப்பில் நீரைக் காய்ச்சும்போது மேலே ஆவி செல்வதைக் கவனித்திருக்கிறீர்களா? இந்த ஆவிக்கு 'நீராவி' என்று பெயர். இந்த ஆவியைத் தடுப்பது போல் ஒரு பலகையைப் பிடித்தால், அந்தக் குளிர்ந்த பலகையின் மேல் நீராவி பட்டதும் அது நீர்த் துளிகளாக மாறுவதைக் காணலாம். கொதிக்கும் சோற்றின்மேல் மூடப்பட்டுள்ள தட்டை நீக்கியதும், தட்டில் நீர்த்துளிகள் காணப்படுகின்றனவல்லவா? இதற்கும் அதே காரணம்தான். எனவே, நீராவி குளிர்ந்த பொருளின்மீது படும்போது, நீராக மாறுகிறது என்று அறிகிறோம்.

கடல், ஆறு, ஏரி போன்ற நீர் நிலைகளிலுள்ள நீர் சூரிய வெப்பத்தினால் ஆவியாக மாறுகிறது. இந்த ஆவி மேலே செல்லும் இயல்பு உடையது. இது மேலே சென்று ஒன்று திரண்டு இருப்பதைத்தான் நாம் 'மேகம்' என்று கூறுகிறோம். மேகத்தின் மேல் குளிர்ந்த காற்றுப் பட்ட வுடன் அது மீண்டும் நீராக மாறி மழையாகப் பொழி

கிறது. மரங்களடர்ந்த பெருங்காடுகள் உள்ள இடங்களில் காற்று குளிர்ச்சியாய் இருக்குமாதலால் அங்கு மழையும் அதிகம் என்பதை முன் வகுப்பிலேயே நீங்கள் படித்திருக்கிறீர்கள்.

உண்பவர்களுக்குத் தக்க உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, மழை தானும் குடிநீராக அமைகிறது. தக்க சமயத்தில் பெய்யாமல் ஒருவரது வாழ்வைக் கெடுக்க வல்லது மழை. மழையில்லாமல் வளம் கெட்டு வாடுபவருக்குத் துணையாய்ப் பெய்து அவர்களைக் கை தூக்கிக் காக்க வல்லதும் மழை. எனவே, இதற்கு அழிக்கும் திறனும், ஆக்குந் திறனும் உண்டு. ஆனால், இக் காலத்தில் அடிக்கடி மழை பொய்த்து விடுகிறது. அதன் காரணமாக உணவுப்பொருள் உற்பத்தி மட்டுப் படுகிறது. உணவு பற்றுக்குறை ஏற்படுகிறது. இதனுற்ருன் அரசினர் ஆற்றில் ஆங்காங்கு நீர்த் தேக்கங்களைக் கட்டி நீரை வீணுக்காமல் பயன் படுத்த முயற்சிகள் எடுத்துள்ளனர். அத்துடன் செயற்கை முறையில் மேகத்தைத் திரட்டி, அதனைக் குளிரச் செய்து, மழை பொழியச் செய்யும் முறையினையும் கண்டு பிடித்துள்ளனர். இது விஞ்ஞான வளர்ச்சி நமக்குத் தந்துள்ள பயனுகும். இனி, வான் பொய்க்காமல் செய்து நாட்டினைச் செழிக்கச் செய்ய இயலுமென நம்பலாம்.

பயிற்சி

1. விடை எழுது :

1. ஒரு நாட்டின் வளத்திற்கு மழை எவ்வாறு இன்றியமையாத தாகிறது ?
2. நீராவியின் தன்மைகள் யாவை ?
3. மழை எவ்வாறு பெய்கிறது ?
4. மழையின் சிறப்புகளைக் கூறு.
5. மழை பொய்க்காதிருக்க அரசினர் மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை ?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

ஒன்றுதிரண்டு, வளம்கெட்டு, மட்டுப்படுகிறது, பற்றுக் குறை, வீணுக்காமல்.

3. தடித்த எழுத்திலுள்ள சொற்களை எடுத்துவிட்டுப் பொருத்த மான வேறு சொற்களை எழுது :

1. ஒரு நாட்டின் **வளத்திற்கு** மழை **இன்றியமையாதது.**
2. நீர் நிலைகள் **வறண்டு** போகும்.
3. மழை **எவ்வாறு** பெய்கிறது?
4. நீர் சூரியனின் **வெப்பத்தினுல்** ஆவியாக மாறும்.
5. அழிக்கும் **திறனும்** உள்ளது என்னலாம்.

4. கீழ்க்காணும் சொற்களில் உள்ள தன்வினைகளையும், பிற வினைகளையும் தனித்தனியாகப் பிரித்து எழுது :

உருள்கிறது, உருட்டுகிறது, மேய்கிறது, கட்டுவித்தான், உண்பித்தாள், பாய்கிறது, நக்குகிறது, கிழித்தேன், அடிப் பித்தேன், அழுதான்.

7. மழை (பாட்டு)

மழையே மழையே வாவா—நல்
வானப்புனலே வாவா ; இவ் வையத்தமுதே வாவா.

தழையா வாழ்வும் தழைக்கவும்—மெய்
தாங்கா வெப்பம் நீங்கவும்
உழுவாரெல்லாம் மலைபோல் எருதை
ஓட்டிப் பொன்னேர் பூட்டவும் மழையே......

தகரப்பந்தல் தண தண வென்னத்
தாழும் குடிசை சளசள வென்ன
நகரப் பெண்கள் செப்புக் குடங்கள்
நன்றெங்கும் தங்கும்பய னென்ன மழையே......

ஏரி குளங்கள் வழியும்படி, நா
டெங்கும் இன்பம் பொழியும்படி, பொடி
வாரித்தூவும் பூவும் காயும்
மரமும் தழையும் நனைந்திடும்படி மழையே......

இல்லாருக்கும், செல்வர்கள்
என்பாருக்கும், தீயவர்
நல்லாருக்கும் முகிலே சமமாய்
நல்கும் செல்வம் நீயன்றோ ? மழையே......

—புரட்சிக் கவிஞர்

பயிற்சி

1. அருஞ்சொற்பொருள் :

புனல் - நீர் ; வையம் - பூமி ; முகில் - மேகம் ; நல்கும் - கொடுக்கும்.

2. இப்பாடலில் கவிஞர் கூறியுள்ள கருத்தை உன் சொந்தத் தொடர்களில் எழுது.

8. பருவத்தே பயிர் செய்

"பருவத்தே பயிர் செய்" என்ற பழமொழியை நீங்கள் அறிந்திருப்பீர்கள். பயிரிடுவதற்கு ஏற்ற பருவத்தில் பயிரிடவேண்டும் என்பது அப்பழமொழியின் கருத்தாகும். தகுந்த பருவத்திற்கு முன்னும் பயிர்செய்யக் கூடாது; பின்னும் பயிர் செய்யக்கூடாது. உரிய காலத்தில் பயிரிட்டால்தான் மழை, சூரிய வெப்பம் முதலியவை வேண்டியபோது வேண்டிய அளவு கிடைத்து, பயிர் செழித்து வளர்ந்து, பயனையும் மிகுதியாகத் தரும். காலந்தவறிப் பயிரிட்டால், நாம் என்ன பாடுபட்டாலும் பயன் கிடைக்காது; மழை அதிகமாகப் பெய்வதாலோ, மழையே பெய்யாமல் காய்வதாலோ பயிர்கள் அழிந்து போகும். ஆகவே, பயிர் செய்வதில் காலந்தவறக் கூடாது என்பது இப்பழமொழியிலிருந்து தெரிகிறது. "ஆடிப் பட்டம் தேடிவிதை", "காலத்துப் பயிர் கரம்பிலே" என்ற பழமொழிகளும் அதே கருத்தை விளக்குவனவே.

காலந்தவறுமை பயிர்த் தொழிலுக்கு மட்டும் வேண்டிய ஒன்றல்ல. எல்லாவற்றிலுமே காலந்தவறக்கூடாது. பள்ளிக்குச் செல்வதும், விளையாடுவதும், வேலை செய்வதும், உண்பதும், உறங்குவதும் ஆகிய எல்லாவற்றிற்குமே காலந்தவறுமை இன்றியமையாததாகும். கல்வி கற்பதற்குரிய பருவம் இளமைப்பருவமே. எனவே, அப்பருவத்தில் கல்வி கற்கத் தவறலாகாது. இளமையிற் கற்காவிட்டால் பிறகு கற்பது மிகவும் அரிது. அதனாற்றான் "இளமையிற் கல்" என்னும் பொன்மொழியும் எழுந்தது.

போருக்குச் செல்லும் அரசனும் தக்க காலத்தை அறிந்தே செல்லவேண்டும். ஓர் அரசன் எவ்வளவு வலியவனாயினும், அவனிடம் மிகுதியாகப் படைகள் இருந்தாலும், அவனது எதிரி எவ்வளவு வலியற்றவனாயினும், அவன் மிகவும் குறைந்த படைகளை உடையவனாயினும், காலமற்ற காலத்தில் போருக்குச் செல்லக்கூடாது.

பொருத்தமான காலத்தில் சென்ருல், ஆற்றல் குறைந்த வனும் ஆற்றல்மிக்க ஒருவனைப் போரில் எளிதாக வெல்ல முடியும்.

மேலுள்ள கருத்தைத் திருவள்ளுவர் மிகமிக அழ காகக் கூறியிருக்கிருர். பறவைகளில் மிக்க வலிமையும், உறுதியும் உடையது கோட்டான். கூட்டமாகச் சேர்ந்து கத்திலுைம் காகம் வலிமையற்ற பறவையேயாகும். கோட்டானுக்கு இரவில்தான் கண் நன்கு தெரியும்; பகலில் தெரியாது. அதனுற்ருன் அது பகலில் மரப் பொந்துகளில் பதுங்கியிருந்து, இரவில் இரை தேடப் புறப்படுகின்றது. எனவே, கோட்டானுக்கு ஏற்ற காலம் இரவுக் காலமாகும். அதேபோல் காகத்திற்கு ஏற்றகாலம் பகற்பொழுதாகும். அதற்கு இரவில் கண் தெரியாது; பகலில்தான் நன்ருய்த் தெரியும். "காகம் தனக்குப் பொருத்தமான காலமாகிய பகற்காலத்தில் சண்டைக்குச் சென்ருல் தன்னினும் மிக்க வலிமையுடைய கோட்டானை யும் வெல்லமுடியும்" என்கிருர் தமிழ் மறையருளிய நம் வள்ளுவர்.

ஆகவே, இளம் மாணவர்களாகிய நீங்கள் எச்செயலை யும் அதற்குரிய காலத்திலேயே தாமதமாகாமல் செய்யப் பழகுங்கள். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்" அல்லவா?

பயிற்சி

1. விடை எழுது :

1. 'பருவத்தே பயிர் செய்' என்பதன் கருத்து யாது?
2. பருவம் தவறிப் பயிரிட்டால் என்ன ஆகும்? ஏன்?
3. கல்வி கற்பதற்குரிய பருவம் எது? ஏன்?
4. போருக்குச் செல்லும் அரசர் கவனிக்கவேண்டியது யாது?
5. போருக்குச் செல்லும் அரசரைப்பற்றி, திருவள்ளுவர் கூறுவதை விளக்கி எழுது.

2. கீழுள்ள தொடர்களைத் தக்க சொற்களை எழுதி முடி :

1. உரிய காலத்தில் பயிரிடாவிட்டால்............

2. அரசன் காலமல்லாத காலத்தில் போருக்குச் சென்ருல் ....

3. காகம் இரவில் கோட்டானிடம் சண்டைக்குச் சென்ருல் ....

4. நாம் இளமையில் கற்காவிட்டால்...............

5. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்ருல்............

3. இது என் வீடு.

நான் பள்ளிக்குச் செல்கிறேன்.

மேற் காணுபவை தொடர்கள் எனப்படும். அவைகளேச் சொற்ருெடர் என்றும், **வாக்கியம்** என்றும் கூறுவதுண்டு.

எழுத்துகளால் ஆனது சொல்லாதல் போல, பல சொற்களால் ஆனது தொடர் எனப்படும்.

ஒவ்வொரு தொடரிலும் பொருள் முற்றுப் பெற்றிருக்க வேண்டும். பொருள் முற்றுப் பெற்றிருப்பதை **முற்றுத்தொடர்** என்றும், பொருள் முற்றுப் பெருமல் அரைகுறையாக உள்ளதை **எச்சத் தொடர்** என்றும் கூறுவது வழக்கம். முற்றுத் தொடரைத் தொடர் என்றே கூறலாம். உங்கள் பயிற்சிகளில் பல இடங்களில் எச்சத் தொடர்களேக் கொடுத்து அவைகளே முற்றுத் தொடர்களாக ஆக்கச் சொல்லி யிருப்பதைப் பாருங்கள்.

4. கீழுள்ள தொடர்களில் எது முற்றுத் தொடர், எது எச்சத் தொடர் என்று கூறு.

1. அவன் கடைக்குச் செல்கிருன்
2. நான் நேற்று பள்ளிக்கூடம்
3. யாருக்கு வேண்டுமாஞலும்
4. யாரும் எனக்கு உதவி செய்ய வேண்டாம்
5. எனக்குத் தெரிந்ததை நான் சொல்வேன்

9. அறிவுக் கடல்

மாணவர்களே! நீங்கள் கடலைப் பார்த்திருக்கிறீர்களல்லவா? அக் கடலில் எவ்வளவு நீர் இருக்கிறது? அதைப்போல் மக்கள் பெருங் கூட்டமாக இருந்தால் அதை "மக்கள் கடல்" என்று கூறுவது வழக்கம். கடல் போல் மிகுதியாக மக்கள் இருக்கிறார்கள் என்பது அதன் பொருள். அவ்வாறே கடல்போல் அறிவு நிறைந்திருந்த தமிழ்நாட்டுப் பெரும்புலவர் ஒருவரை அறிவுக் கடல் என்று அழைப்பது வழக்கம். இப்பாடத்தில் அப் புலவர் பெருமானைப் பற்றிச் சிறிது அறிந்து கொள்வோம்.

நான்காம் வகுப்பில் தமிழ்த் தென்றல் திரு. வி. க. என்னும் புலவரைப் பற்றி நீங்கள் படித்தீர்கள். அவருடைய ஆசிரியர்தான் 'அறிவுக் கடல்' என்று மக்களால் பாராட்டப்படுகிறார். அவரது பெற்றோர் அவருக்கு இட்டபெயர் 'வேதாசலம்' என்பதாகும். அது வடமொழி என்னும் வேற்று மொழியில் அமைந்த பெயர். தமிழ்ப் பற்று மிகுந்த இவர் தமது பெயரே வேறொரு மொழியில் அமைந்திருப்பதை வெறுத்தார். அதனால், தமது பெயரை 'மறை மலை' என்று நல்ல தமிழில் மாற்றி அமைத்துக் கொண்டார். பிற்காலத்தில் இவர் துறவி போல் வாழ்ந்ததால் "மறைமலை அடிகள்" என்று அனைவராலும் மாண்புடன் அழைக்கப்பட்டார்.

அறிவுக் கடலாகிய "மறைமலை அடிகள்," தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாகப்பட்டினத்திற்கு அருகிலுள்ள காடம்பாடியில் 15-7-1876-ல் சொக்கநாதருக்கும், சின்னம்மையாருக்கும் அருமைத் திருமகனாராகப் பிறந்தார். இவர் இளம் பருவத்திலேயே தமது தந்தையை இழந்து, தாயின், மேற்பார்வையில் வளர்ந்தார். மறைமலை அடிகளாருக்குச் சௌந்தரவல்லி, பொன்னம்மாள், கண்ணம்மாள் என்ற மூன்று மனைவியர்களும், பல மக்களும் உண்டு.

அடிகள் பள்ளியில் படித்ததோடு நில்லாமல், தனிப்

பட்ட முறையில் பல தமிழ் அறிஞர்களை அடுத்துத் தமிழ் இலக்கியங்களையும், இலக்கணங்களையும் கற்றுத் தேர்ந் தார். தமிழில் புலமை பெற்றது போலவே ஆங்கிலத்தி லும், வடமொழியிலும் சிறந்த புலமை பெற்ருர். அதனுற்ருன், இவரை 'மும்மொழிப் புலவர்' என்றும் கூறுவர். அடிகள் திருவனந்தபுரத்திலும், சென்னைக் கடுத்த தாம்பரத்திலும் உள்ள கல்லூரிகளில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி யிருக்கிருர்.

அடிகளார் எழுதியுள்ள நூல்களுக்கு அளவே இல்லை. அவ்வளவு நூல்களையும் அறிவுத்தேன் சுரக்கும் அழகிய மலர்கள் என்று கூறலாம். 'நூருண்டு வாழ்வது எப்படி?' என்பது அவர் எழுதிய நூல்களில் ஒன்ருகும். மக்கள் நூறு வயது வரை வாழவேண்டுமாளுல் எப்படி எப்படி இருக்கவேண்டும் என்று அந்நூலில் எழுதியுள் ளார். அவர் எழுதியுள்ளபடி நடப்பவர்கள் நோய்நொடி இன்றி நெடுங்காலம் வாழலாம்.

நம் அறிவுக்கடல் எழுத்தில் மட்டுமின்றிப் பேச்சிலும் வல்லவராகத் திகழ்ந்தார். இரண்டு மூன்று மணி நேர மாளுலும் மக்கள் அவரது சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டே யிருப்பர். நூற்றுக் கணக்கில் பணம் கொடுத்து அவரது சொற்பொழிவுகளை மக்கள் கேட்பாரா யின், அவரது சொற்பொழிவின் பெருமைகளைக் கூறவும் வேண்டுமோ?

தமது அலுவல்களையெல்லாம் விட்டுவிட்டு அடிகள் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினேராம் ஆண்டில் சென்னையை அடுத்த பல்லவபுரத்தில் சென்று தங்கினர். பல்லவபுரம் என்ற ஊரே இக்காலத்தில் பல்லாவரம் என்று அழைக்கப்படுகிறது. அங்கு தமிழையும், சைவ மதத்தையும் வளர்ப்பதற்காகப் பொதுநிலைக் கழகம் என்ற ஒரு கழகத்தை ஏற்படுத்தினர். அங்கு ஏறத் தாழ 4000 நூல்களுள்ள ஒரு பெரிய நூல் நிலையத்தை ஏற்படுத்திப் பலருக்கும் பயன்படச் செய்தார். இத் தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த நம் அறிவுக்கடல்-மறை மலையடிகளார் 15-9-1950-ல் நம்மை விட்டுப் பிரிந்தார்.

ஆனால் அவரது பெயரும், புகழும், தமிழும் தமிழ் நாடும் உள்ளளவும் நின்று நிலவுவனவாகும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. மறைமலை அடிகளாருக்குப் பெற்றோர் இட்ட பெயர் என்ன? அதனை அவர் ஏன் மாற்றி வைத்துக் கொண்டார்?

2. மறைமலை அடிகளார் பிறந்த ஊர் எது? அவரது பெற்றோர்கள் யாவர்?

3. அவரை அறிவுக்கடல் என்று அழைப்பது எவ்வாறு பொருந்தும்? மும் மொழிப் புலவர் என்று அழைப்பது எவ்வாறு பொருந்தும்?

4. அவரது நூல்கள் எப்படிப் பட்டவை?

5. பொது நிலைக் கழகம் எங்கு நிறுவப்பட்டது? அதன் நோக்கம் யாது?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

மேற்பார்வை, பணியாற்றி, சுரக்கும், பயன்பட, சீரும் சிறப்பும்.

3. சேர்த்து எழுது :

சொல்வது	+	உண்டு	அவருக்கு	+	இட்ட
வேறு	+	ஒரு	மக்களும்	+	உண்டு
சென்னைக்கு	+	அடுத்த	கேட்பார்கள்	+	என்றால்

4. பல சொற்களால் ஆக்கப்பட்டு ஒரு முழுப் பொருளைத் தருவது ஒரு தொடராதல் போல, பல தொடர்கள் சேர்ந்து வருவது ஒரு **பத்தி** ஆகும். ஒவ்வொரு பத்தியிலும் ஒவ்வொரு கருத்துக் கூறப்பட்டிருக்கும். ஒரே கருத்தைப் பல பத்திகளில் எழுதலாகாது. பத்தியைப் ‘**பாரா**’ என்றும் சொல்வார்கள். உனது பாடங்கள் எல்லாம் பத்தி பத்தியாக எழுதப்பட்டிருப்பதைக் கவனி.

இப்பாடத்தில் உள்ள முதல் பத்திக்கு ‘அறிவுக் கடல் என்று யாரைக் கூறலாம்?’ என்றும், இரண்டாம் பத்திக்கு ‘வேதாசலம்-மறைமலையானார்’ என்றும், தலைப்புக் கொடுக்கலாம். இவ்வாறே மற்ற பத்திகளுக்கும் ஒவ்வொரு தலைப்பு கொடு.

10. கடிதங்கள்

முன் வகுப்பில் நீங்கள் கடிதம் வரைதலைப் பற்றி அறிந்திருக்கிறீர்கள். சில மாதிரிக் கடிதங்களையும் படித்துப் பயின்றிருக்கிறீர்கள். சாதாரணமாகக் கடிதங்களின் தொடக்கமும், முடிவும் அவற்றில் அடங்கியுள்ள செய்திகளுக் கேற்பவும், அவை யாருக்கு அனுப்பப்படுகின்றனவோ அவற்றிற் கேற்பவும் மாறுபடும். எனினும் பொதுவாகக் கடிதங்களை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக் கூறலாம்.

1. நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எழுதும் கடிதங்களைச் **சொந்தக் கடிதங்கள்** எனலாம். இவற்றின் தொடக்கமும், முடிவும் 'அன்புள்ள' என்றிருக்கும். இத்தகைய கடிதங்களில் பெரும்பாலும் சொந்தச் செய்திகளே காணப்படும். அழைப்பிதழ்களையும் இவ்வகைக் கடிதங்களில் சேர்க்கலாம்.

2. வியாபாரம் பற்றி எழுதப்படுவனவற்றை **வாணிகக் கடிதங்கள்** என்று கூறலாம். இவற்றின் தொடக்கத்தில் 'ஐயா' எனவும், முடிவில் 'உண்மையுள்ள' எனவும் எழுதுவர். இத்தகைய கடிதங்களில் நமது தேவைகளையும், வியாபார சம்பந்தமான விவரங்களையும் தெளிவாக எழுத வேண்டும்.

3. அதிகாரிகளுக்கு எழுதும் கடிதங்கள் **விண்ணப்பக் கடிதங்கள்** எனப்படும். இக் கடிதங்களில் பணிவு மிகுதியாகக் காணப்படல் வேண்டும். ஓய்வு வேண்டி ஆசிரியருக்கு எழுதும் கடிதமும் இவ்வகையைச் சேர்ந்ததே.

4. பொது நலத்திற்கான பொருள் பற்றி பொது நிலையங்களுக்கும், செய்தித் தாள்களுக்கும் வரையும் கடிதங்கள் **பொதுநலக் கடிதங்கள்** ஆகும். இவற்றில் நமது கருத்துகள் அனைத்தும் தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

கீழே சில மாதிரிக் கடிதங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் படித்துப் பாருங்கள்.

1. சொந்தக் கடிதம்

15, நடுத்தெரு,
புளியங்குடி, மதுரை,
3–10–56.

அன்புள்ள நண்பன் மணிக்கு,

நலம். நலமறிய அவா. உன்னிடமிருந்து நீண்ட நாட்களாகக் கடிதமே வரவில்லை. காரணம் என்ன? உனது பள்ளித் தேர்வு முடிந்து விடுமுறை தொடங்கி இருக்குமெனக் கருதுகிறேன். எனது தேர்வில் நான் மிகவும் திருப்தியாக எழுதியுள்ளேன்.

விடுமுறைக்கு முதல் நாள் எங்கள் பள்ளி விளையாட்டு வெளியில் 'விளையாட்டு விழா' நடைபெற்றது. நானும் என் பள்ளித்தோழர்களும் இவ் விழாவில் சேர்ந்து விளையாடினேம். எங்கள் பள்ளி மாணவர்கள் மட்டுமல்லாமல், சுற்றுப் புறத்திலுள்ள பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

விழாத் துவக்கத்தில் நாங்கள் அணியணியாக வீரர்களைப் போல் நடந்து சென்றேம். பின்னர் எங்களைச் சிறு சிறு பிரிவுகளாகப் பிரித்து விளையாட்டுகள், பாட்டுக்கேற்ற நடிப்புகள், வீர முழக்கங்கள் முதலிய பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தினர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஒவ்வோர் ஆசிரியர் இருந்து கவனித்துக்கொண்டார்.

இவ் விழாவிற்கு மாவட்டத் தண்டல் நாயகம் தலைமை தாங்கினர். அலங்கரிக்கப்பட்ட மேடையில் தலைவரும், மற்றும் சில பெரியோர்களும் அமர்ந்து விழாவைக் கண்டு களித்தனர். எங்கள் ஊர் மக்கள் பலரும் விழாவிற்கு வந்திருந்தனர். எங்கள் விளையாட்டுகளைப் பற்றியும், நடிப்புத் திறனைப் பற்றியும் தலைவர் மிகவும் பாராட்டிப் பேசினர். இவ் விழா எங்களுக்கு மிக்க எழுச்சியை அளித்தது.

உங்கள் பள்ளியில் இது போன்ற விழாவிற்கு ஏற்பாடு செய்கிறீர்களா?

உனது பெற்ருேருக்கு என் வணக்கத்தை அறிவிக்க வேண்டுகிறேன்.

பதிலை எதிர்பார்க்கிறேன்.

அன்புள்ள,
முருகன்.

தோழர் மணிவண்ணன் அவர்கட்கு,
36, திருவள்ளுவர் தெரு,
தேவக்கோட்டை.

2. வாணிகக் கடிதம்

18, மேட்டுத் தெரு,
உறையூர், திருச்சி,
7–10–56.

பதிப்பக உரிமையாளர் அவர்கட்கு,

ஐயா,

எனது சொந்த உபயோகத்திற்காக கீழ்க்குறித்துள்ள புத்தகங்கள் தேவைப்படுகின்றன. அவற்றின் விலையைப் பற்றியும், அவற்றைப் பதிவு அஞ்சலில் அனுப்ப இயலுமா என்பது பற்றியும் அறிவிக்க வேண்டுகிறேன். பதில் எழுதுவதற்காக எனது முகவரி எழுதிய அஞ்சல் உறை ஒன்றும் இத்துடன் வைத்துள்ளேன்.

தேவையான புத்தகங்கள் :—

1. திருக்குறள் விரிவுரையுடன்
2. இலக்கிய அறிமுகம்
3. தென்னுட்டு வீரர் வரலாறு

இங்ஙனம்,
உண்மையுள்ள,
இளவழகன்.

உரிமையாளர் அவர்கட்கு,
தென்னுட்டுப் பதிப்பகம்,
16, பிராட்வே,
சென்னை–1.

பயிற்சி

விடை எழுது :

1. கடிதங்களின் நான்கு பிரிவுகள் யாவை? அவை ஒவ்வொன்றும் யார் யாருக்கு எழுதக் கூடியவை?

2. உனது பள்ளி விழாவைப் பற்றி உன் தந்தைக்கு ஒரு கடிதம் எழுது.

3. உனது பிறந்த நாள் விழாவிற்கு விருந்துண்ண வருமாறு உன் நண்பனுக்கு ஓர் அழைப்புக் கடிதம் எழுது.

11. ஏட்டுச் சுரைக்காய்

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?" என்பது மிகவும் அருமைவாய்ந்த பழமொழியாகும். ஒரு தாளில் சுரைக்காய் போல் படம் போட்டு, அல்லது சுரைக்காய் என்று எழுதி வைத்துக்கொண்டால் அதனுல் என்ன பயன் கிடைக்கும்? அதனைக் கறிசமைத்து உண்ண முடியுமா? உண்மைச் சுரைக்காய்தான் உணவுக்கு உதவுமே ஒழிய, ஏட்டில் எழுதப்பட்டுள்ள சுரைக்காய் உதவாது. அதுபோல எதனையும் செயலில் செய்தால் தான் பயன் விளையுமே தவிர நூல்களில் எழுதிவைப்பதினுலோ, அவற்றைப் படிப்பதனுலோ மட்டும் பயன் எதுவும் உண்டாகாது.

ஏட்டில் சுரைக்காய் என்று எழுதுவது அந்த ஏட்டில் எழுதப்பட்டுள்ள காயைக் கிழித்துச் சமைத்துத் தின்பதற்காகவா? அல்லவே; அதைப்போன்ற சுரைக்காய் ஒன்றைப் பயிரிட்டோ, விலக்கு வாங்கியோ சமைத்து உண்பதற்காகத்தான். "இன்று பகல் பன்னிரண்டு மணிக்கு எங்கள் வீட்டிற்கு விருந்து உண்ண வாருங்கள்" என்று யாராவது அழைப்பு ஒன்று எழுதிக் கொடுத்தால் அவ்வழைப்புத் தாளையே விருந்தாக உண்பவர்களுண்டா? அதில் குறித்துள்ள நேரத்தில், குறித்துள்ள இடத்திற்குச் சென்று விருந்துண்பார்கள். அவ்வாறு செல்வதற்குத்தான் அது உதவி செய்யும். அதைப் போலவே, ஏட்டில் உள்ள எக்கருத்தும் அதை உணர்ந்து அதன்படி நடந்தால்தான் பயன் தருமேதவிர, ஏட்டில் இருப்பதனுலேயே ஒரு பயனும் அளிக்காது. செயலில் செய்வதற்கு, ஏட்டில் உள்ள கருத்து தூண்டு கோலாயிருக்கும்.

யாராவது இனி உங்களைப் பார்த்து ஏட்டுச் சுரைக் காய் கறிக்காகுமா என்று கேட்டால் நீங்கள் என்ன விடை அளிப்பீர்கள்? ஏட்டிலே மட்டும் இருந்தால் ஆகாது; செயலில் செய்தால் கறிக்கு ஆகும் என்று சொல்ல வேண்டும். அதாவது ஏட்டிலுள்ள எக்கருத்தை

யும் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி ஒழுகினல் அது பயனளிக்கும்.

"பள்ளிக்கணக்கு புள்ளிக்கு உதவாது" என்ற பழமொழியும் இதேபோன்றதுதான். பள்ளிக்கூடத்தில் மாணவர் பயிலும் கணக்கு பிறகு வாழ்க்கையில் புள்ளி போடப் பயன்படாதாம். "அவ்விதம் பயன்படாத கணக்கை நாங்கள் ஏன் அரும்பாடுபட்டுக் கற்கவேண்டும்?" என்று நீங்கள் வினவலாம். ஏட்டுச் சுரைக்காயைக் கறிக்கு உதவும்படி செய்வதைப் போலவே பள்ளிக்கணக்கையும் புள்ளிக்கு உதவும்படியாகச் செய்துகொள்ள வேண்டும். பள்ளியில் கணக்குப் பயில்வதும் பிற பாடங்களைக் கற்பதும் வாழ்க்கையில் பயன்படுத்துவதற்காகத்தான்.

நம் திருவள்ளுவர், கல்வியைப் பற்றிக் கூறும்போது இக் கருத்துகளையே மிகவும் அருமையாகக் கூறியுள்ளார். "ஒருவன் கண்டகண்ட நூல்களைக் கற்கக்கூடாது. சிறந்த பயனளிக்கக்கூடிய நூல்களைத் தவறு இல்லாமல் கற்கவேண்டும். கற்ற பிறகு "கற்றபடி நடக்க வேண்டும்" என்று கூறுகிருர். கற்றபடி நடக்காவிட்டால் கற்றதனுல் எள்ளளவும் பயனில்லை. ஆகவே, ஏட்டுச் சுரைக்காயைக் கறிக்கு ஆகும்படிச் செய்துகொள்ள வேண்டும் என்று அறிந்தோம். நீங்கள் இப்போது கற்கும் கல்வியை உங்கள் பிற்கால வாழ்க்கையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. 'ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு ஆகுமா?' என்ற பழமொழியின் கருத்து என்ன?
2. ஏட்டில் உள்ள கருத்து எப்போது பயனளிக்கும்?
3. 'பள்ளிக் கணக்கு புள்ளிக்கு உதவாது' என்ற பழமொழி எதை வற்புறுத்துகிறது?
4. கல்வியைப் பற்றித் திருவள்ளுவர் கூறியுள்ளது யாது?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

புரிந்துகொண்டு, முயன்று, அருமையாக, கண்ட கண்ட, எள்ளளவும்.

3. எதிர்ச் சொற்கள் எழுது :

ஆகுமா, முடியுமா, பயனில்லை, அளிக்கும், இல்லாமல்.

4. பாம்பு மூத்தப்பனைக் கடித்துவிட்டது. அவன், ஐயோ! அம்மா! என்று கத்தினன்.

மேலுள்ள சில சொற்களுக்கு அருகே (!) இவ்வாறு குறியிடப்பட்டுள்ளது. இக்குறியை வியப்பூட்டும் இடங்களிலும், உணர்ச்சிகரமான இடங்களிலும் இடுவதால் இதற்கு **வியப்புக் குறி** அல்லது **உணர்ச்சிக் குறி** என்று பெயர். இதனை **ஆச்சரியக் குறி** என்றும் கூறுவதுண்டு. உன் பாடங்களில் இக் குறி வந்துள்ள இடங்களைக் கவனி.

12. காகம் பாம்பைக் கொன்றது (பாட்டு)

(பஞ்ச தந்திரம்)

கோடுறு சினையிற் காகம்
　　கூடுவைத் தனேக காலம்
பேடொடு கூடி வாழும்
　　பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங்
　　கதுபெறு முட்டை எல்லாம்
நாடியே குடித்துப் போட
　　நலிந்துளம் மெலிந்து வாடி, 1

தன்னுயிர்ப் பாங்க னை
　　சம்புகன் அருகு போ''யிங்(கு)
என்னசெய் குவன் நான்!'' என்ன,
　　'' இதைக் கொல்லல் அரிதோ ! நீ போய்

மன்னவன் தேவி யாடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
போடுக பொந்தில்'' என்ன, 2

காகமப் படியே செய்யக்
காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
ஈர்ந்தனர் ; ஈரும் போதில்
நாகமங் கிருந்து சீற,
நறுக்கினர் இருதுண் டாக ;
ஆகையால் உபாயத் தாகா(து)
இல்லென அறையும் பின்னே.

—வீரமார்த்தாண்டதேவர்

பயிற்சி

1. அருஞ்சொற்பொருள் :

கோடுறு சினை - வளைந்த கிளை; பேடு - பெட்டை ; பெறு - பெற்ற (இட்ட); நலிந்து - சோர்ந்து ; பாங்கன் - தோழன் ; சம்புகன் - நரி ; தேவி - அரசி ; மஞ்சனச் சாலை - குளிக்குமிடம் ; பொன்னணி - பொன்னாலான ஆபரணம் ; காவலன் - அரசன் ; ஏவலாளர் - வேலைக்காரர் ; ஈர்ந்தனர் - இடித்தனர் ; உபாயம் - தந்திரம் ; அறையும் - கூறும்.

2. இச் செய்யுளில் உள்ள கதையை உன் சொந்தத் தொடரில் எழுது.

3. காகமும் நரியும் பேசிக்கொள்வதை உரையாடல் போல் எழுது.

13. தந்தையைக் காத்த தனயன்

திருநெல்வேலி மாவட்டத்தில், வள்ளியூர் என்று ஓர் ஊர் உளது. அங்கு பற்பல வணிகரும், செல்வரும் சிறப்புடன் வாழ்ந்திருந்தனர். வணிகருள் தனபாலர் என்பவர் வாணிபத்தின் மூலம் பெரும் பொருள் திரட்டி இருந்தார். அவருக்குப் பல வீடுகளும், பல காணி நிலங்களும் இருந்தன.

தனபாலருக்கு இரு பிள்ளைகள் இருந்தார்கள். மூத்தவன் பெயர் தம்பித்துரை; இளையவன் பெயர் மணிவேலன். அவர்களின் தாயார், அவர்கள் சிறுவயதினராய் இருக்கும்போதே இறந்து விட்டார். எனவே, தந்தையின் பாதுகாப்பிலேயே தாயற்ற இரு சிறுவரும் வளர்ந்து வந்தனர்.

தம்பித்துரை கொஞ்சம் மந்த புத்தி யுள்ளவன்; சரியாகப் படிக்கமாட்டான்; பள்ளிக்கூடத்தில் அவன்தான் கடைசிப் பையன்; எந்த வேலையையும் சுறுசுறுப்பாய்ச் செய்ய மாட்டான். ஆகவே, தனபாலருக்குத் தம்பித்துரையைக் கண்டால் வெறுப்பாக இருந்தது. அவனை எப்போதும் அடித்துக் கொண்டும், திட்டிக் கொண்டும் இருந்தார். இளையவன் மணிவேலனே படிப்பில் கெட்டிக்காரன்; பள்ளியில் எல்லாப் பாடங்களிலும் நிறைய மதிப்பெண்கள் பெறுபவன். எனவே, தனபாலருக்குத் தன் இளைய மகன் மீது அளவுகடந்த அன்பு பிறந்ததில் வியப்பில்லையல்லவா ?

மணிவேலனுக்குத் தன் தந்தை தன்னிடம் மட்டும் அன்பாய் இருப்பதைக் கண்டு மிகவும் பெருமையாய் இருந்தது; அண்ணனைத் தந்தை அடிக்கும் போதெல்லாம் சிரித்துச் சிரித்துக் கேலி செய்வான்; தந்தையிடம் தம்பித்துரையைப் பற்றிக் கோள் பல கூறி, அடிக்கடி அடி வாங்கி வைப்பான். இதனால் தம்பித்துரைக்கு மிகவும் வருத்தமா யிருந்தது. தவறு செய்யாத காலத்திலும் துன்பப்பட வேண்டியிருந்தது. அதைக் கண்ட அவனுடைய மாமா அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச்

சென்று விட்டார். அவனுடைய மாமாவின் வீடு அதே ஊரில் மறுகோடியில் இருந்தது.

தனபாலர், மணிவேலனிடம் மிகவும் அன்பாய் இருந்தார் அல்லவா ? தன் செல்வம் அனைத்துக்கும் அவனையே உரிமையாக்க எண்ணினர். ஆனால் மணிவேலனே, தனக்குச் செல்வாக்கு அதிகமாக ஆகக் கெட்ட பிள்ளையாய் மாறத் தொடங்கினன்; தீயவர்களுடன் சேர்ந்து பழகினன்; தீய பழக்கங்களைக் கையாண்டான்; தன் தந்தையையும் மதிக்காமல் அவர் மீது அவ்வப்போது குறைகூற ஆரம்பித்தான்.

ஒரு சமயம், தனபாலர் நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையா யிருந்தார். அவரால் எழுந்து நடமாடக்கூட இயலவில்லை. அக்காலத்தில்கூட, மணிவேலன் தந்தையின் அருகில் அமர்ந்து அவருக்கு வேண்டிய உதவிகள் புரியவில்லை. ஒரு நாள் திடீரென அவர்கள் வீட்டில் தீப் பிடித்துக் கொண்டது. காற்று பலமாக வீசவே தீ கொழுந்து விட்டெரியத் தொடங்கியது. வீடு தீப்பிடித்துக் கொண்டதும் மணிவேலன், நோயாளியான தன் தந்தையைக் கூட கவனிக்காமல் வெளியே ஓடிவிட்டான். பாவம்! நோயாய்ப் படுத்திருந்த தனபாலரோ எழுந்து நிற்கக் கூட முடியாமல் கதறிய வண்ணம் படுத்திருந்தார். தீ அவரைச் சூழ்ந்து கொண்டது. அக்கம் பக்கத்தார் வீட்டின் தீயை அணைக்க அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தனர். ஆனல் அது அவ்வளவு எளிதில் முடியக்கூடியதாகத் தோன்றவில்லை.

தன் வீட்டில் நெருப்புப் பற்றிக் கொண்ட செய்தியையறிந்த தம்பித்துரை, தன் மாமா வீட்டிலிருந்து ஓடோடியும் வந்தான். தன் தந்தை உள்ளே அகப்பட்டுத் தவிப்பதைக் கேட்டுத் திடுக்கிட்டான். உடனே சிறிதும் காலந் தாழ்த்தாமல் எரியும் தீக்குள் புகுந்தான்; தன் தந்தையை மிகுந்த அல்லலுடன் தூக்கிக் கொண்டு வெளியே வந்தான். வீட்டின் தீயும் ஒருவாறு அணைக்கப்பட்டது.

தம்பித்துரைக்கு, நெருப்பினல் பல இடங்களில் காய

மேற்பட்டிருந்தது. தனது மூத்த மகன் தக்க நேரத்தில் வந்து காப்பாற்றியதையும், தான் அவனுக்கு இழைத்த கொடுமைகளையும் எண்ணி எண்ணித் தனபாலர் வெட்கி

னூர். "அப்பா மகனே! ஆபத்து வேளையில் உன் உயிரைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல் விரைந்து வந்து என்னைக் காப்பாற்றினுயே! நீயே உத்தமன். ஐயோ! உன் அருமைக் குணத்தை அறியாமல் நான் உனக்கு எத்தனையோ தீங்குகள் செய்தேன்" என்று கூறித் தம்பித்துரையைத் தழுவிக்கொண்டார். ஆபத்துக் காலத்தில் உதவாத பிள்ளை இருந்தென்ன, இல்லாதிருந்தென்ன என்று கருதித் தனபாலர் மணிவேலனை வீட்டை விட்டுப் போகுமாறு பணித்தார். ஆனல் தம்பித்துரையோ தன் தந்தையைச் சமாதானப்படுத்தி, மணிவேலனை மன்னிக்குமாறு செய்தான். மணிவேலனும் தன் தவறுகளை உணர்ந்து திருந்தினுன்.

பிள்ளைகளே! தம்பித்துரையின் அருங்குணத்தைப் பார்த்தீர்களா? தந்தை தன்னை வெறுத்தும், ஆபத்து

வேளையில் முன்வந்து உதவினான்; தன்னைக் கேலி செய்து தற்பெருமையுடன் இருந்த தம்பியிடமும் அன்பு காட்டினான்.

பயிற்சி

1. விடை எழுது :

1. தனபாலர் ஏன் தம்பித்துரையை வெறுத்தார்? மணிவேலனை ஏன் விரும்பினார்?

2. தம்பித் துரையின் மாமா ஏன் அவனைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டார்?

3. நாள் செல்லச் செல்ல மணிவேலன் எவ்வாறு மாறினான்?

4. தனபாலரைத் தீயிலிருந்து காப்பாற்றியவன் யார்? எவ்வாறு?

5. மணிவேலன் மீது தனபாலர் ஏன் கோபங்கொண்டார்? அவரைச் சமாதானம் செய்தவன் யார்?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

அளவு கடந்த, கொழுந்து விட்டெரிய, அக்கம்பக்கத்தார், காலந் தாழ்த்தாமல், பொருட்படுத்தாமல்.

3. சேர்த்து எழுது :

ஓர்	+ ஊர்	திரட்டி	+ இருந்தார்
வியப்பு	+ இல்லை	அடிக்கும்போது	+ எல்லாம்
இருந்தார்	+ அல்லவா	அருகில்	+ அமர்ந்து

4. இப்பாடத்திலிருந்து அறுவகைப் பெயருக்கும் இரண்டிரண்டு சொற்கள் எடுத்து எழுது.

14. ஊன் உண்ணும் செடிகள்

செடிகளையும் இலைகளையும் தின்னும் பூச்சிகளைப் பற்றி நீங்கள் அறிந்திருக்கிறீர்களல்லவா? ஆனால் பூச்சிகளைத் தின்னும் சில செடிகளும் இருக்கின்றன என்பதை அறிந்தால் நீங்கள் வியப்படைவீர்கள். சாதாரணமாக எல்லாச் செடிகளும் தமக்கு வேண்டிய உணவை மண்ணிலிருந்தே பெறுகின்றன. ஆனால் ஊன் உண்ணும் செடிகள், மண்ணிலிருந்து உணவை உறிஞ்சுவதுடன் திருப்தியடையாமல், பூச்சிகளையும் பிடித்துத் தின்கின்றன.

ஊன் உண்ணும் செடிகள் பூச்சிகளைக் கவர்வதற்காகப் பல வண்ணங்களுடனும், மணங்களுடனும் தோற்றமளிக்கின்றன; தம்மீது அமரும் பூச்சிகளைப் பிடித்துக் கொள்வதற்கு வேண்டிய உறுப்புகளையும் பெற்றிருக்கின்றன. இச் செடிகள் பூச்சிகளைப் பிடிக்கின்ற விதமும், அவற்றைக் கொன்று தின்கின்ற விதமும் மிகப் புதுமையாய் இருக்கும்.

முதலாவதாக 'சண்டியூ' என்ற செடியைக் கவனிக்கலாம். இச் செடியின் இலைகள் நீண்ட காம்புகளின் முனைகளில் உள்ளன. இவ் விலைகளின் நுனிகள் உட்புறம் குவிந்து இருக்கின்றன. அவற்றின் வெளிப்புறத்தில் பிசின் போன்ற ஒருவித நீரைச் சுரக்கும் மயிர்கள் இருக்கின்றன. காலை நேரத்தில் சூரிய ஒளியில், இந்நீர்ப் பொருள் பளபளக்கும். இந்த ஒளியினால் கவரப்பட்டு பூச்சி செடியின்மீது அமர்ந்ததும், பசையில் ஒட்டிக் கொள்ளும். பூச்சி பிறகு பறக்க முடியாமல் உயிருக்குப் போராடும்.



உடனே செடி அப்பூச்சியை இலையின் உட்புறத்தில் சுருட்டி வைத்துக் கொள்ளும்; செறிக்கச் செய்யும்

நீரைச் சுரந்து பூச்சியின் சத்தையெல்லாம் உறிஞ்சிக் கொள்ளும்; தோலை வெளியே தள்ளிவிடும். இவ்வகைச் செடிகள் அமெரிக்காவில் உள்ளன.

'நிபந்தீஸ்' என்ற மற்றொரு வகைச் செடியைக் கிழக்கு இந்தியத் தீவுகளில் காணலாம். இச் செடியின் இலையின் நுனி கம்பி போல் நீண்டு, முனையில் ஒரு குடம் போன்ற உறுப்புடன் இருக்கும். இந்தக் குடத்திற்கு அழகிய நிறத்துடன் கூடிய ஒரு மூடியும் உண்டு. மூடியின் நிறத்தால் கவரப்பட்ட பூச்சி, தேன் குடிக்க குடத்தின் விளிம்பின்மேல் உட்காரும். குடத்தின் வாய் வழ வழப்பாய் இருப்பதால், பூச்சி வழுக்கிக் குடத்திற்குள் விழுந்து விடும். உடனே மூடி தானாகவே மூடிக்கொள்ளும். பூச்சி வெளியே வரமுடியாமல் உள்ளேயே சிறைப்பட்டு இறக்கும்; பிறகு அங்கு சுரக்கும் நீரில் கரைந்து செடிக்கு உணவாகும்.





'டையோனியா' என்னும் இன்னொரு வகைச் செடியும் அமெரிக்காவில் இருக்கிறது. இதன் இலைகள் இரண்டு பாகங்களாகப் பிரிந்திருக்கின்றன. ஒவ்வொரு பாகத்தின் விளிம்பும் முட்கள் போன்றுள்ளது. பூச்சிகள் அம்முட்களில் பட்டதும், இலையின் இரு பாகங்களும் மூடிக்கொள்ளும். பூச்சிகள் இலைகளின் இடையே அகப்பட்டு, அங்கு உண்டாகும் நச்சு நீரினால் இறக்கும். அவை முழுவதும் செடிக்கு உணவான பின்னரே இலைகள் முன் போல் திறக்கும்.

இவை போன்று செடிகளின் வாழ்க்கையில் பல அற்புதங்கள் உள்ளன. அவற்றைப் பற்றி இன்னும் விரிவாக மேல் வகுப்புகளில் தெரிந்து கொள்ளலாம்.

பயிற்சி

1. விடை எழுது :

1. சாதாரணமாகச் செடிகள் உணவை எங்கிருந்து பெறுகின்றன ?

2. ஊன் உண்ணும் செடிகள் எவ்வாறு பூச்சிகளைக் கவர்கின்றன ?

3. ஊன் உண்ணும் செடி ஒன்றைப் பற்றி ஐந்து தொடர்கள் எழுது.

2. கீழுள்ள சொற்களில் ஒரே பொருள் உள்ளவைகளை இணைத்து எழுது :

வியப்பு	பக்கம்
கவர்தல்	அதிசயம்
வண்ணம்	காட்சி
தோற்றம்	அழைத்தல்
புறம்	நிறம்
அற்புதம்	ஆச்சரியம்

3. கீழுள்ள தொடர்களைத் திருத்தமாக எழுது :

1. நீங்கள் பூச்சிகளை உண்டு கேள்விப்பட்டால் வியப்படைவீர்கள் உயிர் வாழும் தாவரங்களைப் பற்றி.

2. பூச்சிகள் தம்மீது அமரும் செடிகளைப் பிடித்துக் கொள்வதற்கேற்ற உறுப்புகளைப் பெற்றிருக்கின்றன.

3. சண்டியூ இலையின் காம்புகள் நீண்ட செடிகளின் முனைகளில் உள்ளன.

4. நிபந்தீஸ் என்ற கம்பியின் இலையின் நுனி செடிபோல் நீண்டு இருக்கும்.

5. இலைகள் பூச்சிகளின் இடையே அகப்பட்டு அங்குண்டாகும் நச்சு நீரினால் இறக்கும்.

6. இப்பாடத்தில் உள்ள 3, 4, 5 பத்திகளைப் படித்து, அவற்றிற்குத் தனித்தனித் தலைப்புகளைக் கொடு.

15. பொன் விழா

மாணவர்களின் தமிழறிவை வளர்ப்பதற்காகப் பள்ளிக்கூடங்களில் தமிழ்க் கழகங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அதேபோல் பண்டைக் காலத்தில் நம் நாட்டில் தமிழ்ச் சங்கங்களை ஏற்படுத்தித் தமிழை வளர்த்தனர். தமிழறிவிற் சிறந்த புலவர் பலர் ஒன்று சேர்ந்து, ஆராய்ச்சிகள் செய்து நூல்கள் இயற்றி வெளியிடும் இடத்திற்குத்தான் சங்கம் என்ற பெயர் இருந்தது. பழந் தமிழ் நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்ததாகத் தெரிகிறது. பாண்டிய அரசர்களே இத் தமிழ்ச் சங்கங்களைத் தோற்றுவித்து நடத்தி வந்திருக்கின்றனர்.

கடலில் மூழ்கிவிட்ட தென் மதுரையில்தான் முதல் சங்கம் இருந்தது. தென்மதுரை கடலில் மூழ்கிய பின்னர், கபாடபுரம் என்னும் ஊரில் இரண்டாஞ் சங்கத்தைத் தோற்றுவித்தனர். பிறகு அதுவும் கடலில் மூழ்கி விட்டதால் பாண்டியர்கள், இப்போதுள்ள மதுரையில் மூன்றுஞ் சங்கத்தை உண்டாக்கினர்கள். அச்சங்கமும் பல ஆண்டுகள் கழித்து மறைந்து போயிற்று. இம் மூன்று சங்கங்களிலும் தமிழ்நாட்டில் அவ்வக் காலங்களில் வாழ்ந்திருந்த பெரும் புலவர்கள் அனைவரும் கூடித் தமிழாராய்ந் திருக்கின்றனர். அவர்கள் நமக்காக எழுதி வைத்த அருமையான நூல்களில் பல கடலில் மூழ்கி மறைந்தன. எஞ்சியுள்ள சில நூல்களைத்தான் நாம் சங்ககால நூல்கள் என்று அழைக்கிறோம்.

தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ் நாட்டில் முச்சங்கங்களுக்குப்பின் எச்சங்கமும் தோன்றவில்லை. தமிழ் ஆர்வமும், தமிழறிவும், தமிழ் வளர்ச்சியும் குன்றத் தொடங்கின. நம் நாட்டில் வேற்று நாட்டாரின் ஆட்சி ஏற்பட்ட காரணத்தினுல், தமிழ்ப் பற்று தமிழர்களின் உள்ளத்திலிருந்து அற்றே போய்விட்டது. தமிழ் மக்களும் தமது அருமைத் தாய்மொழியை மறந்து, வேற்று மொழிகளிடத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தலாயி

னர். தமிழர் சொந்தத் தாயை மறந்த பிள்ளைகளைப்போல் ஆயினர்.

இக்குறைகளையெல்லாம் போக்கி, தமிழ் மக்களின் உள்ளத்தில் மீண்டும் தமிழ்ப்பற்றையும், தமிழறிவையும், தமிழ் வளர்ச்சிக்கான ஆவலையும் தூண்டுவதற்காக மூன்ரும் சங்கம் இருந்து மறைந்த மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் தோன்றியது. இச்சங்கத்தைத் தோற்றுவித்தவர் உயர்திரு. பாண்டித்துரைத் தேவர் என்னும் வள்ளலாவர். ஆயிரத்துத் தொளாயிரத்து ஓராம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பதினுன்காம் நாளே நான்காம் தமிழ்ச் சங்கம் அரும்பிய நன்னுளாகும்.

இச்சங்கம் தோன்றியதுமுதல் அது நன்கு நடைபெறுவதற்கு வேண்டிய பொருள் வசதி முதலியவற்றை இராமநாதபுரம் அரச குடும்பத்தினர் ஏற்படுத்தி வைத்துள்ளனர். இச்சங்கத்தின் வளர்ச்சிக்குப் பல தமிழறிஞர்களும், வள்ளல்களும் பாடுபட்டுள்ளனர். இது இக்காலத்தில் தமிழ் வளர்ச்சிக்காகப் பல்வேறு வகைகளிலும் தொண்டாற்றி வருகின்றது. இதன்சார்பாக ஒரு கல்லூரியும், நூல் நிலையம் ஒன்றும், ஆராய்ச்சி நிலையம் ஒன்றும், செந்தமிழ் என்னும் திங்கள்தோறும் வெளிவரும் இதழ் ஒன்றும் நடைபெற்று வருகின்றன.

இவ்வரும்பெரும் சங்கம் தொடங்கப்பட்டு, ஐம்பது ஆண்டுகள் முடிந்துவிட்டன. எனவே, ஐம்பது ஆண்டுகள் நிறைந்ததற்கு அறிகுறியாகக் கொண்டாடப்படும் பொன் விழாவை அண்மையில் தமிழ் மக்கள் அனைவரும் சேர்ந்து கொண்டாடினுர்கள். இப் பொன்விழா ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தாரும் ஆண்டு மே திங்கள் முப்பதாம் நாளிலிருந்து சூன் ஐந்தாம் நாள்வரை மதுரையம்பதியில் மிகமிகச் சிறப்புடன் நடந்தேறியது. தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் தலைவர்களும், எல்லா அறிஞர்களும் அவ்விழாவில் கலந்துகொண்டனர். விழா நடைபெற்ற ஏழு நாட்களும் பேச்சும், பாட்டும், கூத்தும் ஆகிய மூன்றுவகையான நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

எனவே அங்கு முத்தமிழும் முழங்கின என்று கூறலாம். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்ச் சங்கம்!!

பயிற்சி

1. விடை எழுது :

1. தமிழ்ச் சங்கங்கள் தோன்றியதேன்?
2. பண்டைத் தமிழ்ச் சங்கங்கள் எத்தனை? அவை எங்கெங்கு இருந்தன?
3. நான்காம் தமிழ்ச் சங்கம் எப்போது தோற்றுவிக்கப் பட்டது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது?
4. நான்காம் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக நடத்தப் படுபவை யாவை?
5. பொன் விழா என்று எதற்குப் பெயர்?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைக்க :

தோற்றுவித்து, எஞ்சியுள்ள, அரும்பிய, அறிகுறி, அண்மையில்.

3. கீழுள்ளவைகளை அறிந்துகொள் :

வெள்ளிவிழா—இருபத்தைந்து ஆண்டு நிறைவு விழா.
பொன் விழா—ஐம்பது ஆண்டு நிறைவு விழா.
வைரவிழா—அறுபது ஆண்டு நிறைவு விழா.
நூற்றாண்டு விழா—நூறு ஆண்டு நிறைவு விழா.

4. கீழுள்ள எச்சத் தொடர்களை முற்றுத் தொடர்களாக்கு :

1. பாண்டிய அரசர் தமிழ்ச் சங்கங்களைத்... ....
2. சங்கப் புலவர்கள் நமக்காகப்............
3. வேற்று நாட்டு ஆட்சி நம் நாட்டில் ஏற்பட்டதால்......
4. தமிழ் மக்களின் உள்ளத்தில்............
5. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழா............

5. முன் வகுப்பில் கற்றுள்ள திணை, பால், எண், இடம், வேற்றுமை ஆகியவைகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

திணை—உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

பால்—ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என ஐவகைப்படும்.

எண்—ஒருமை, பன்மை என இருவகைப்படும்.

இடம்—தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப் படும்.

தன்மைக்கும் முன்னிலைக்கும், திணையும், பாலும் கூற முடியாது. எண்தான் கூறலாம்.

கீழுள்ள கட்டங்களை நிரப்பு :

		திணை	பால்	எண்	இடம்
1	பாண்டியர்				
2	சங்கம்				
3	நடத்தினர்				
4	அரசன்				
5	நீ				
6	நாங்கள்				
7	தமிழரசி				
8	மூழ்கின				

16. தொண்டர் படை



பிள்ளைகளே! படத்தில் உள்ள சிறுவர்களைப் பாருங்கள். இவர்கள் அனைவரும் ஒரேமாதிரி உடை அணிந்திருப்பதைக் கவனியுங்கள். முழங்கால் வரை காற்சட்டையும், முழங்கை வரை உடற் சட்டையும், இடையில் பட்டையும் அணிந்திருக்கிறார்களல்லவா? இவர்களின் கழுத்தைச் சுற்றி ஒரு துண்டுத் துணியையும் கட்டியிருக்கிறார்கள். இந்தக் கழுத்துத் துணிகள்கூட ஒரே நிறமாய் உள்ளன. இவர்கள் யார் தெரிகிறதா? இவர்கள் தொண்டர் படையைச் சேர்ந்தவர்கள். இவர்களனைவரும் தொண்டர்கள். இவர்களது படை, சாரண இயக்கத்தைச் சேர்ந்தது. எனவே, இவர்களைச் சாரணர்கள் என்றும் அழைப்பர்.

இத்தகைய தொண்டர்களை மக்கள் திரளாகக் கூடும் திருவிழாக்களிலும், பெருங் கூட்டங்களிலும் காணலாம். அங்கு இவர்கள் மக்களுக்குத் தேவையான உதவிகளைத்

தையும் புரிவர். இவர்கள் ஒழுங்கு முறை தவறாமல் நடந்து கொள்வர். எப்போதும் புன்னகை தவழும் முகத்துடன் பிறருக்கு உதவி புரிய முன்வருவர்.

'தயாராய் இரு' என்பதே இவர்களது குறிக்கோள். தேவையேற்படும் காலங்களிலெல்லாம் பிறருக்குத் தொண்டு புரியத் தயாராயிருக்க வேண்டு மென்பதே இவர்களின் நோக்கம். 'ஆண்டவனுக்கும், அரசினருக்கும், மக்களுக்கும் நாம் கடமைப்பட்டவர்கள் ; பிறருக்கு எப்போதும் தொண்டு புரிவதே நமது நோக்கம்; இயக்கத்தின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடத்தலே எமது பெருமை' என்ற மூன்று பெருங் கொள்கைகளைக் கொண்டவர்கள் இத்தொண்டர்கள். இவை மூன்றும் நாட்டின் நற்பணிக்குத் தேவையான உயர்ந்த கொள்கைகள் அல்லவா ?

இவர்கள் தொண்டாற்றுவதற்கேற்ற உளப்பண்பு பெற்றவர்களாய் இருக்க வேண்டும். அத்துடன் தக்க சமயத்தில் தக்க முறையில் உதவுவதற்கான அறிவும் பெற்றிருக்க வேண்டும்; நல்ல உடலுரமும் அடைந்திருக்க வேண்டும். இவற்றிற்கான பயிற்சிகளனைத்தும் தொண்டர்படையில் இவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. முதலுதவி செய்தல், தீயிலிருந்து காப்பாற்றுதல், விரைவினில் செய்தி யனுப்புதல் போன்ற பலதிறப்பட்ட அறிவுகள் செயல் முறையில் இவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன.

இவர்கள் அடிக்கடி கூட்டமாக இன்பச் செலவு சென்று வெளியே தங்குவார்கள். அங்கே தங்களுக்குத் தேவையான உணவு தயாரித்தல் முதற்கொண்டு எல்லா அலுவல்களையும் தாங்களே செய்து கொள்வர். இதன் மூலம் இவர்கள் தன்னம்பிக்கையையும் பெறுகின்றனர். ஒற்றுமை, சுறுசுறுப்பு, உண்மை பேசுதல் முதலிய நற்பண்புகளையும் வளர்த்துக் கொள்கின்றனர்.

இத்தகைய தொண்டர் படைகள் பல பள்ளிகளில் உள்ளன. இவ்வியக்கத்தில் சேர விரும்பும் பள்ளிச் சிறுவர்களைத் திரட்டி இப்படைகள் அமைக்கப்பட்

டுள்ளன. சிறுவர்க்கான தொண்டர்படையில் சிறுவர்களின் வயது நிலைக்கேற்ப இரு பிரிவுகள் உண்டு. அவை இளந் தொண்டர் படை, தொண்டர் படை என்பன. தொண்டர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் போன்றே குறைந்த அளவில் இளந் தொண்டர்களுக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்களது பயிற்சி பெரும்பாலும் பாட்டுகள், விளையாட்டுகள், கதைகள் ஆகியவற்றின் மூலமாகவே இருக்கும். ஆயினும் இவர்களும் தம்மால் முடிந்த அளவு பிறருக்கு உதவக்கூடிய நிலைக்குத் தயாராக்கப்படுகிறார்கள். இதேபோன்று பெண்களின் தொண்டர் படைகளும் சில இடங்களில் உண்டு.

நீ தொண்டர் படையில் சேர விரும்புகிறாயா ?

பயிற்சி

1. விடை எழுது :

1. தொண்டர் படையினரின் குறிக்கோள் என்ன? அவர்களின் கொள்கைகள் யாவை ?
2. தொண்டர் படையில் தொண்டர்களுக்கு என்னென்ன கற்பிக்கப்படுகின்றன ?
3. தொண்டர்கள் அடிக்கடி ஏன் இன்பச் செலவு செல்கிறார்கள் ?
4. இளந் தொண்டர்கள் என்பவர் யார் ?
5. இளந் தொண்டர்களுக்குப் பயிற்சி எவ்வாறு அளிக்கப்படுகிறது ?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

குறிக்கோள், உளப் பண்பு, நற்பணி, உடலுரம், இவற்றிற்கான, பலதிறப்பட்ட, வயது நிலைக்கேற்ப, முடிந்த அளவு.

3. ஒரு தொடரிலுள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை அறிவது எப்படி என்று முன் வகுப்பில் அறிந்திருக்கிறீர்களல்லவா ? கீழுள்ள தொடர்களுக்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறுங்கள் :

1. பிள்ளைகளே ! நீங்கள் இச்சிறுவர்களைப் பாருங்கள்.
2. இவர்கள் கழுத்தில் ஒரு துணியைக் கட்டியிருக்கிறார்கள்.

3. இவர்கள் மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வார்கள்.

4. ஆசிரியர்கள் இவர்களுக்கு வேண்டிய நல்ல பயிற்சிகளைத் தருகிறார்கள்.

5. நீ இத்தகைய தொண்டனைப் பார்த்திருக்கிறாயா?

4. 'இவர்கள் ஆண்டவனுக்கும், அரசினருக்கும், மக்களுக்கும் கடமைப்பட்டவர்கள்; பிறருக்கு எப்போதும் தொண்டு புரிவார்கள்; இயக்கத்தின் சட்டதிட்டங்களுக்கு அடங்கி நடப்பார்கள்.' மேற்காணும் தொடரில் (;) இவ்வாறு இடப்பட்டுள்ள குறிக்கு **அரைப்புள்ளி** என்று பெயர்.

ஒரே எழுவாய்க்குப் பல பயனிலைகள் வந்தால், அவ்வாறு வரும் ஒவ்வொரு பயனிலைக்கும் அரைப்புள்ளி இட்டுக் கடைசிப் பயனிலைக்கு முற்றுப்புள்ளி இட வேண்டும்.

இதுவரை நீங்கள் முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, மேற்கோள் குறி ஆகியவற்றை அறிந்திருக்கிறீர்கள். இவை யனைத்திற்கும் சேர்த்து **நிறுத்தக் குறிகள்** என்று பெயர். நீங்கள் பாடங்களைப் படிக்கும்போது நிறுத்தக் குறிகளைக் கவனித்து, அவற்றிற் கேற்றபடி நிறுத்திப் படிக்க வேண்டும்; எழுதும்போதும் நிறுத்தக் குறிகளை இட்டு எழுதப் பழக வேண்டும்.

133667
சென்னை-600 008.

17. உழைப்பால் உயர்ந்தோர்

பிள்ளைகளே! மின்சார விளக்கின் உதவியினால் நாம் நல்ல வெளிச்சத்தைப் பெறுகிறோம்; கிராமபோன் மூலம் பாட்டுகளைக் கேட்கிறோம்; ஒலிப் பெருக்கி மூலம் கூட்டங்களில் தொலைவில் பேசப்படும் பேச்சுகளையும் தெளிவாகக் கேட்கிறோம்; படக் காட்சியைக் கண்டு களிக்கிறோம். இக்கருவிகளை நமக்குக் கண்டுபிடித்துத் தந்தவர் யார் என்று நீங்கள் நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா? அவர்தான் தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர். அவர் அமெரிக்க நாட்டில் மிகவும் ஏழைக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். தமது சலியா உழைப்பால் பல அரிய பொருள்களைக் கண்டுபிடித்து உலகுக்குத் தந்துள்ளார்.

எடிசன் சிறு வயதில் ஒரு பெரிய போக்கிரியாய் இருந்தார். பள்ளிப் படிப்பில் சிறிதும் கவனம் செலுத்தாமல் எப்போதும் கேலிச் சித்திரங்கள் வரைவதும், பிறருக்குத் தொல்லை கொடுப்பதுமாக இருந்தார். எனவே, அவரது பெற்றோர் அவரைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டனர். அவரது தாயாரே அவருக்கு ஆசிரியரானார். அவர் தம் அருமை மகனுக்கு வீரர்களின் வரலாறுகளையும், வீரச் செயல்களையும் கற்பித்தார். இவ்வரலாறுகள் எடிசனது இளமை யுள்ளத்தில் ஆழப் பதிந்தன. நாட்டுப் பற்றும், இனப்பற்றும், பிறர்க்குத் தொண்டுபுரியும் மனப்பான்மையும், உழைப்பே உயர்வளிக்கும் என்னும் உண்மையும் அவர் உள்ளத்தே வளர்ந்தன; நன்றாய்ப் படிக்க வேண்டும், உழைத்து உயர்வு பெறவேண்டும் என்ற ஊக்கமும் அவர் உள்ளத்தில் எழுந்தது.

எடிசன் ஏழ்மை நிரம்பிய குடியில் பிறந்து, ஏழ்மைச் சூழ்நிலையிலேயே வளர்ந்தார் அல்லவா? அவர் தம் பெற்றோர் ஏழ்மையினால் துயருறுவதைக் கண்டு, எப்படியாவது அவர்களுக்கு உதவ வேண்டுமென்று எண்ணினார். தம் வீட்டுச் சிறு தோட்டத்தில் காய்கறிகளைப் பயிரிட்டு விற்றார். அதன்மூலம் கிடைத்த தொகையில் பாதியைத்

தம் பெற்ருேருக்குக் கொடுத்து, மீதியில் அறிவியல் நூல் களை வாங்கிப் படித்தார்.

சிறிது காலத்திற்குப் பின்னர், எடிசன் புகைவண்டி நிலையம் ஒன்றில் செய்தித்தாள் விற்கும் வேலையில் அமர்ந் தார். அதிலிருந்து கிடைக்கும் சிறு வருவாயிலும் மிகச் சிறு தொகையைச் சேர்த்துவைத்தார். செய்தித்தாள் ஒன்றினைத் தாமே வெளியிட வேண்டுமென்னும் அவா அவருக்கு எழலாயிற்று. எனவே தாம் சேர்த்த பொருளைக் கொண்டு, புகைவண்டியின் அறையொன்றில் சொந்த மாக ஓர் அச்சகம் அமைத்துக்கொண்டார். அவரே செய்தித்தாளுக்கு வேண்டிய செய்திகளை எல்லாம் எழுதி ஞர்; அவைகளைத் தாமே அச்சுக் கோர்த்து அச்சிட் டார்; அதுமட்டுமன்றி அச்செய்தித் தாள்களைத் தாமே விற்றும் வந்தார். இங்ஙனம் சலியா உழைப்பால் தம் பத்திரிகையைச் சிறந்த முறையில் நடத்தி வந்தபோது அவருக்கு வயது பதின்மூன்றுதான். பிள்ளைகளே! இளம் வயதிலேயே அவரது உழைப்பின் திறனைக் கவனித் தீர்களா? உழைப்பு இன்றேல் உலகில் உயர்வும் இல்லை, புகழும் இல்லை என்பதே அவரது கருத்து. உலகில் பயன் தரத்தக்க புதுப்புதுக் கருவிகளைக் கண்டுபிடிக்க வேண்டு மென்னும் ஆர்வமும் அவருக்கிருந்தது. எனவே, செய் தித் தாள் வெளியிடும் காலத்திலேயே பல ஆராய்ச்சி களையும் செய்து வந்தார்.

ஒரு சமயம் எடிசன், புகைவண்டி நிலையத்து அதி காரி ஒருவரிடம் தந்தியடிக்கும் கலையைக் கற்ருர். பின் னர், அவர் பல தந்தி நிலையங்களில் வேலை செய்தார்; தம் ஓய்வு நேரத்தில் இரசாயன ஆராய்ச்சிகளையும் தொடர்ந்து நடத்திவந்தார். சிறிதும் சோர்வுருமல் சிற் றெறும்புபோல் ஏதேனும் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டே இருந்தார். இவ்வாராய்ச்சிகளின் பயனுகத் தங்கத்தின் விலையில் ஏற்றத்தாழ்வுகளைக் கணக்கிடக் கூடிய ஓர் அருமையான கருவியைக் கண்டுபிடித்தார். அதனை நாற்பதினுயிரம் டாலருக்கு (அமெரிக்க நாணயம்) விற்ருர்.

இளம் வயதில் ஏழையாயிருந்து வருந்திய எடிசன், பெரும்பொருள் பெற்றதும் சோம்பித் திரியத் தொடங்க வில்லை. தாம் பெற்ற தொகையைக் கொண்டு புதுத் தொழிற்சாலையொன்றை நிறுவினர். இரவு பகலாகப் புதுப்புதுக் கருவிகள் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டார். ஒரே



தந்திக் கம்பியில் பல செய்திகள் அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தார்; ஓடும் இரயில் வண்டிகளுக்குத் தந்தி அனுப்பும் வகையைக் கண்டார்; இரயில் வண்டிகளை மின்சாரத்தின்மூலம் ஓடச் செய்தார்; ஒலிபெருக்கி, கிராமபோன், மின்சார விளக்கு, பேசும் படக்காட்சி போன்றவற்றையும் இவரே கண்டுபிடித்தார். இங்ஙனம் எடிசன் தம் வாழ்நாள் முழுதும் பல அரிய பொருள்களைக் கண்டுபிடிப்பதிலேயே ஈடுபட்டார். அவர் தமது 84-வது வயதில் காலமானர்.

பிள்ளைகளே! உங்கள் வீட்டில் மின்சார விளக்கு எரியும்போதெல்லாம் தாமஸ் ஆல்வா எடிசனைப்பற்றி நினையுங்கள். கிராமபோன்மூலம் பாட்டுகளைக் கேட்கும்

போதெல்லாம் அவரைப்பற்றி எண்ணுங்கள். உழைப்பால் உயர்ந்த அவரைப்போல் நீங்கள் ஒவ்வொருவரும் உழைத்து முன்னுக்குவரப் பாடுபடுங்கள்.

பயிற்சி

1. விடை எழுது :

1. எடிசன் தமது சிறுவயதிலேயே உழைப்பின் உயர்வை உணர்ந்தவர் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு கூறு.

2. எடிசன் தமது பதின்மூன்றும் வயதில் நடத்திய தொழில் யாது ?

3. எடிசன் கண்டுபிடித்த சில கருவிகளைக் கூறு.

4. எடிசனைப்பற்றி உனது சொந்தத் தொடர்களில் 15 வரிகள் எழுது.

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

சலியா உழைப்பு, துயருறுவது, அவா எழலாயிற்று, அதுமட்டுமின்றி, பயன்தரத்தக்க, ஈடுபட்டு.

3. எதிர்ச்சொற்கள் எழுது :

அரிய, பிறந்தார், தொல்லை, இளமை, பதிந்தன, ஊக்கம், ஏழை, புகழ்.

4. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதில் அதே பொருள் தரும் வேறு சொற்களை எழுது :

1, படக்காட்சியைக் **கண்டு களிக்கிறோம்.**

2. **அன்னையார்** வீரர்களின் வரலாறுகளைக் கற்பித்தார்.

3. **உழைத்து** உயர்வு பெற **விரும்பினர்.**

4. பெற்றோர் **ஏழ்மையில் துன்புறுவதைக்** கண்டார்.

5. செய்தித்தாள் விற்கும் **வேலையில்** அமர்ந்தார்.

18. குரங்கும் குருவியும் (பாட்டு)

(பஞ்ச தந்திரம்)

“ பாடுறு மூட னுக்குப்
பற்பல போதித் தாலும்
வீடுடை யவனை வீட்டை
இழந்திடச் செய்வான் ” என்று
நேடுறு சன்மன் சொல்வான் :
நெடியதோர் பழம ரத்தில்
கூடு கொண்டன இரண்டு
தூக்கணங் குருவி தாமே. 1

குளிரினல் நடுங்கி, வானக்
கொடு மழையால் நனைந்து,
நளிர்சுரத் தோடு தேகம்
நடுங்கியே, பற்கள் கிட்டி
வளம்அறு குரங்கொன் றங்கு
வந்தது. குருவி பார்த்தே
இளகிய மனத் தினலே
இன்சொலால் ஒன்று சொல்லும். 2

"கைகள் கால் இருந்தும்
இந்த கன்மத்தை அனுபவிக்கும்
செய்திரேன் ?'' என்ன, " ஊசி
மூஞ்சிகொள் சிறிய மூடா !
வைதுநீ புத்தி சொல்ல
வல்லையோ '' எனக் கோபித்து
நெய்திடும் அதன் தன்கூட்டை
நெடுங்கையால் பிய்த்த தன்றே. 3

—வீரமார்த்தாண்ட தேவர்

பயிற்சி

1. அருஞ்சொற்பொருள் :

பாடுறு - துன்புறுகின்ற ; நேடுறு - ஆராய்ச்சிமிக்க ; சன்மன் - அந்தணனுடைய பெயர் ; கன்மத்தை - துன்பத்தை ; நெய்திடும் - கட்டியுள்ள.

2. குருவி குரங்கிடம் என்ன கூறியது ?

3. குரங்கு ஏன் குருவிமீது கோபங் கொண்டது ?

4. இக்கதையை உன் சொந்தத் தொடர்களில் எழுது

19. முயலின் வெற்றி

யானை எவ்வளவு வலிமையுள்ளதென்று உங்களுக்குத் தெரியும். பெரிய பெரிய மரங்களைத் தூக்கும்; உறுதி யான கோட்டைகளையும் இடித்துத் தூள் தூளாக்கிவிடும். இத்தகைய யானைகளின் கூட்டம் ஒன்றை, ஒரு முயல் தன் நுண்ணிய அறிவால் அஞ்சி ஓடும்படி செய்தது. அஃதெப்படி என்பதைக் கீழுள்ள கதையைப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

ஒரு மலைக் காட்டில் பல யானைகள் வாழ்ந்து வந்தன. ஒரு சமயம் அங்கு மழையே பெய்யவில்லை. ஆறு, ஓடை, குளம் முதலிய எல்லா நீர் நிலைகளும் வறண்டுவிட்டன. குடிநீர் கிடைக்காமல் யானைகள் மிகவும் திண்டாடின. சில யானைகள் நீர் வேட்கையால் இறந்தும் போயின. ஒரு நாள் எல்லா யானைகளும் ஒன்றுகூடி என்ன செய்ய லாம் என்று யோசித்தன. நெடுநேரம் யோசனை செய்த பிறகு அக் காட்டை விட்டு வெளியேறி, நீருள்ள வேறொரு இடத்திற்குச் சென்று குடியேறுவது என்று முடிவு செய்தன.

பின்னர் அவை பலநாட்கள் நடந்து நெடுந் தொலைவி லுள்ள ஒரு புதிய காட்டை அடைந்தன. அங்கே என்றும் வற்ருத ஒரு பெரிய சுனை இருந்தது. அதைக் கண்ட யானைகள் மகிழ்ச்சிப் பெருக்கால் தலைகால் தெரியாமல் துள்ளின. நீரில் இறங்கி அன்று மாலைவரையில் விளை யாடின. அச்சுனையின் சுற்றுப்புறத்தில் வாழ்ந்த முயல் களில் பல யானைகள் குதித்துக் கும்மாளம் போட்டபோது அவற்றின் கால்களில் சிக்குண்டு இறந்தன. சில கையொடிந்தும், காலொடிந்தும் வருந்தின. பிழைத்த முயல்கள் அனைத்தும் மூலைக்கொன்ருய் ஓடின.

பிறகு அவை யாவும் ஒன்றுகூடி யானைகளை எவ்வாறு அங்கிருந்து விரட்டலாம் என்று எண்ணலாயின. ஒவ் வொரு முயலும் ஒவ்வொரு திட்டத்தைக் கூறிற்று. ஆனல் அத்திட்டங்களில் எதுவும் பொருத்தமானதாக இல்லை. கடைசியில் ஒரு கிழமுயல் எழுந்து, “நான்

எப்படியாவது அந்த யானைகளை யெல்லாம் நம் காட்டி லிருந்து ஓட்டிவிடுகிறேன். அதுவரையில் நீங்கள் எங் காவது சென்று பதுங்கியிருங்கள்,'' என்று கூறிவிட்டு யானைகள் வரும் வழியில் இருந்த ஒரு மேட்டில் ஏறி உட்கார்ந்திருந்தது.

யானைகள் எங்கோ சென்று மேய்ந்துவிட்டுச் சுனையை நோக்கி வந்துகொண்டிருந்தன. யானைகள், தான் இருந்த மேட்டிற்கு அருகில் வந்ததும், முயல் அவை களைப் பார்த்து, "ஓ! அறிவு கெட்ட யானைகளே! உங்க ளுக்கு எவ்வளவு கொழுப்பு இருந்தால் இங்கு வந்து இப்படித் தலைகால் தெரியாமல் விளையாடுவீர்கள். உங் களை யெல்லாம் நான் அடித்துக் கொல்லப் போகிறேன்,'' என்றது. அதைக் கேட்ட யானைகளின் தலைவன் கேலியாகச் சிரித்துவிட்டு முயலைப் பார்த்து, "நீ யார்?'' என்று கேட்டது.



"நான் சந்திரமண்டலத்திலிருந்து வருகிறேன். எங்கள் அரசர் என்னை உங்களிடம் தூதாக அனுப்பினர்.

நீங்கள் இங்கு வந்து விளையாடுவதால் நாள்தோறும் பல முயல்கள் இறக்கின்றன. ஆதலால் நீங்கள் இப்போதே இங்கிருந்து ஓடிவிட வேண்டும். இல்லாவிட்டால் எங்கள் அரசர் உங்களையெல்லாம் கொன்றுவிடுவதாகச் சொல்லி வரச் சொன்னார்,'' என்று அக் கிழ முயல் கூறியதும், யானைகள் நடுநடுங்கிவிட்டன; பெரிய இடத்திலிருந்து வரும் தூதன் என்று கருதி அக் கிழமுயலுக்கு வணக்கம் செய்தன.

அரசயானை முயலை வணங்கிவிட்டு ''சந்திரனின் தூதரே! நான் உங்கள் அரசரைப் பார்த்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு இவ்விடத்தை விட்டு என் கூட்டத்தோடு ஓடிவிடுகிறேன். ஆகையினால் என்னை உங்கள் அரசரிடம் அழைத்துச் செல்வீரா?'' என்று கேட்டது. முயல் சிறிது யோசித்துவிட்டு, ''எங்கள் அரசரும் இப்போது இக்காட்டுக்கு அருகில் வந்திருக்கிறார். நீமட்டும் வா,'' எனக் கூறி அரசயானையை அழைத்துச் சென்றது.

அருகில் இருந்த ஒரு குளத்தில் வானத்தில் இருந்த நிலவின் வடிவம் தெரிந்தது. முயல் அதை யானைக்குக் காட்டி, இதோ எங்கள் அரசர் தவம் செய்துகொண்டிருக்கிறார். அவரை இப்போது தொந்தரவு செய்தால் அவருக்கு மிகுந்த கோபம் வரும். ஆகையால் இங்கிருந்தபடியே அவரைப் பார்த்து வணங்கிவிட்டு ஓடிவிடு. நான் அவரிடம் சொல்லி உங்கள் அனைவரையும் மன்னிக்கச் சொல்கிறேன்,'' என்றது. குளத்தில் தெரிந்த நிலவின் நிழலை உண்மை நிலவு என்று நம்பிய யானையும் அதற்கு ஒரு கும்பிடு, அதன் தூதனாகிய கிழ முயலுக்கு ஒரு கும்பிடு என்று இரண்டு கும்பிடுகள் போட்டுவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் ஓடித் தன் கூட்டத்தையும் அழைத்துக்கொண்டு வேறொரு காட்டிற்குச் சென்றுவிட்டது.

கிழ முயலின் அறிவுக் கூர்மையால் எல்லா முயல்களும் அன்று முதல் அச்சமின்றி அக்காட்டில் இன்பமாக வாழ்ந்தன. அறிவு இருந்தால் ஆகாத காரியமும் உண்டோ?

பயிற்சி

1. விடை எழுது :

1. யானைகள் ஏன் வேறு காட்டிற்குச் சென்றன ?
2. யானைகளால் முயல்களுக்கு ஏற்பட்ட தொந்தரவு யாது ?
3. யானைகளை விரட்டக் கிழ முயல் என்ன தந்திரம் செய்தது ?
4. அரச யானை எவ்வாறு ஏமாந்தது ?
5. இரண்டாவது காட்டை விட்டு யானைகள் ஏன் சென்று விட்டன ?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

நுண்ணிய, நெடுந்தொலைவு, மகிழ்ச்சிப்பெருக்கு, தலைகால் தெரியாமல், சுற்றுப்புறத்தில், மூலைக்கொன்ருய், பொருத்தமான தாக, அறிவுக் கூர்மை.

3. எச்சத் தொடர்களை முற்றுத் தொடர்களாக்கு :

1. யானை தன் தந்தங்களால்............
2. யானைகள் எல்லாம் ஒருநாள்............
3. முயல்கள் அனைத்தும் ஒன்றுகூடி............
4. கிழ முயலின் பேச்சைக் கேட்டு............
5. சந்திரனின் நிழலைக் கண்ட யானை............

4. கீழுள்ள கட்டங்களில் வெற்றிடங்களை நிரப்பு :

	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
1	தெரிந்தது	......	......
2	......	வருகிறேன்	......
3	......	......	செல்வீரா
4	வந்தன	......	......
5	......	......	ஓடுவேன்

20. நீலகிரி

தென்னிந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலையும், கிழக்குத் தொடர்ச்சி மலையும் கூடுமிடத்தில் நீலகிரி என்னும் மலை உள்ளது. இம் மலைமீதுள்ள நிலப்பரப்பே நீலகிரி மாவட்டம் ஆகும். இம் மாவட்டத்திலுள்ள நகரங்களுள் ஒன்று உதகை மண்டலம். இது, கடல் மட்டத்திற்குமேல் சுமார் ஏழாயிரம் அடி உயரத்தில் இருக்கிறது.

உதகை மண்டலம் ஓர் உடல்நலம் பேணும் இடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கோடைக் காலத்தில் மக்கள் வாழ்வதற்கேற்ற சோலையூர் என இதனைக் கூறலாம். துதவர் என்னும் பழங்குடி மக்களே இங்கு பண்டைக்காலத்தில் வாழ்ந்து வந்தனர். பலரும் வசதிகளுடன் சென்று தங்குவதற்கேற்ற வகையில் சாலைகளும், அரண்மனைகளும், பிற வசதிகளும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இவ்வூரில் ஏற்படுத்தப்பட்டன.

இவ்வூரை அடைதற்கு மேட்டுப்பாளையம் புகைவண்டி நிலையத்திலிருந்து மலைமேல் சுமார் முப்பது மைல் செல்ல வேண்டும். இத் தூரத்தினை மோட்டார் மூலமாகவோ, புகைவண்டி மூலமாகவோ கடந்து செல்லலாம். புகைவண்டி இருப்புப்பாதையில் சாதாரணமாக உள்ள இரு

வரிசைத் தண்டவாளங்களுடன், பற்கள் பொருந்திய ஒரு தண்டவாளமும் நடுவே உள்ளது. வண்டியின் இரு சக்கரங்கள் இரு தண்டவாளங்களின் மீதும், பற்களுள்ள மற்ருெரு சக்கரம் இடையேயுள்ள பல் தண்டவாளத்தின் மீதும் பொருந்தி வண்டி ஓடும். இத்தகைய ஏற்பாட்டினுல் புகைவண்டி மேல்நோக்கி ஏறும்போது நழுவாமல் இருக்கும்.

மோட்டார் செல்லும் சாலேகள் ஆங்காங்கு, தலேயில் செருகும் கொண்டை ஊசியைப் போல் வளேந்து வளேந்து காணப்படும். அடிவார ஏற்றத்திலிருந்தே வேகத்தை மட்டுப்படுத்தவும், சாலேத் திருப்பங்களே உணர்த்தவுமான அறிவிப்புப் பலகைகள் சாலே ஓரங்களில் ஆங்காங்கே செந்நிறத்தில் அமைக்கப்பட்டுள்ளன. வழி முழுவதும் சாலேயோரங்களில் இயற்கைவளம் மிக்க சோலேகளேக் காணலாம்.

அடிவாரத்திலிருந்து மேலே செல்லும் வழியில் சுமார் ஐயாயிரம்அடி உயரத்தில் குன்னூர் என்னும் நகரம் உள்ளது. இவ்வூரினேக் கடந்தே உதகை மண்டலம் செல்ல வேண்டும். குன்றூர் என்பதே மருவிக் குன்னூர் என்று வழங்குகிறது போலும். குன்னூரை யடுத்தவுடனேயே, குளிர்ந்த உணர்ச்சி யுண்டாகிக் கம்பளி உடை அணிவதற்கான வேட்கை தோன்றும். குன்னூரில் ‘சிம்ஸ் பார்க்’ என்ற பூங்கா காணத்தக்க இடமாகும். குன்னூரில், நாய்க்கடி முறிவுக்கான மருந்து தயாரிக்கும் ‘பாஸ்டர் இன்ஸ்டிடியூட்’ இருக்கிறது; பட்டுப் புழுக்களே வளர்த்துப் பட்டுநூல் உற்பத்திசெய்யும் நிலேயமும், உணவு ஆராய்ச்சி நிலேயமும் இங்குள்ளன.

குன்னூரை அடுத்து உள்ளது ‘வெலிங்டன்’ என்ற ஊராகும். இங்குப் படைவீரர் தங்கும் இல்லங்கள் உள்ளன. இதற்கு அடுத்து உள்ளது அருவங்காடு என்னும் ஊர். இங்குப் போர்ப் படையினருக்குத் தேவையான வெடிமருந்து தயாரிப்புச் சாலே உள்ளது. இவ்வூர்களேக் கடந்து மேலும் சென்ருல் உதகை மண்டலத்தை அடையலாம்.

உதகை மண்டலம் ஒரு மலைநகரமாதலின் ஆங்காங்கு பற்பல இடங்கட்கும் மேட்டிலும், பள்ளத்திலும் ஏறியும், இறங்கியும் செல்லவேண்டி யிருக்கும். கட்டடங்கள் தூரப் பார்வைக்குப் படிக்கட்டுகளில் வரிசை வரிசையாகக் கொலு வைத்துள்ளவை போல் காட்சியளிக்கும். மலைச் சரிவுகளில் கோஸ், தக்காளி, பீட்ரூட், சீமை முள்ளங்கி போன்ற காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. நீலகிரித் தைலம் என்ற ஒருவகை எண்ணெய் இறக்குவதற்கான இலைகளையுடைய யூகலிப்டஸ் மரங்கள் இம் மலைப்பகுதி யில் மிகுதியும் உண்டு. உருளைக் கிழங்கு உற்பத்தியும் இங்கு அதிகம்.

உதகை மண்டலத்தில் ஏரி, பூங்கா ஆகியவை பார்க்கத்தக்க இடங்களாகும். இங்குள்ள ஏரி, இயற்கை யாய் அமைந்துள்ள ஒரு நீர் நிலையாகும். பூங்கா மிக அழகிய முறையில் வைத்து வளர்க்கப்பட்டு வருகின்றது. பல மேனாட்டு மரங்களையும், செடிகளையும் இப் பூங்காவில் காணலாம். வண்ண மலர்கள் பல சிறந்த தோற்றங் களுடன் இங்குக் காட்சியளிக்கின்றன. ஆனால் அவை ஒன்றிலும் மணம் இருக்காது. இப் பூங்காவில் கோடைக் காலத்தில் ஆண்டுக்கொரு நாள் மலர்க்காட்சி நடத்தப் படுகிறது. சென்னை மாநில ஆளுனர் (கவர்னர்) தங்கு வதற்கான அரண்மனை யொன்றும் பூங்காவின் ஒரு புறம் உள்ளது.

ஒரு முறையேனும் உதகை மண்டலம் சென்று அவ்விடத்தின் இயற்கைக் காட்சிகளைக் கண்டு தட்ப வெப்ப நிலையினை உணர்ந்து வருவது பெரிதும் இன்பம் பயப்பதாகும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. நீலகிரி மலை எங்குள்ளது ?
2. நீலகிரி மலைமீது புகைவண்டி செல்லும்போது நழுவாம லிருக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

3. உதகை மண்டலத்திற்குப் போகும் வழியில் உள்ள ஊர்கள் சில கூறு.

4. குன்னூரில் காணத்தக்க இடங்கள் யாவை ?

5. உதகை மண்டலத்தைப் பற்றி பத்து வரிகள் எழுது.

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

பண்டைக் காலம், மட்டுப் படுத்த, உணர்ச்சி, பார்க்கத் தக்க, இயற்கையாய், பயப்பதாகும்.

3. எதிர்ச் சொற்கள் எழுது :

வளைந்து, ஏற்றம், மட்டுப் படுத்த, வேட்கை, மேடு.

4. பிரித்து எழுது :

தென்னிந்தியாவில், கூடுமிடத்தில், மலைமீதுள்ள, ஏழாயிரம், வாழ்வதற்கேற்ற, ஐயாயிரம், பற்பல.

21. மருத்துவ மனை

தம்பி : அண்ணு ! இந்தப் பத்திரிகைச் செய்தியைப் பார்த்தீர்களா ? காவனூரில் ஒரு புதிய மருத்துவ மனை திறந்துள்ளார்களாம். இப்போதெல்லாம் அடிக்கடி புதுப் புது மருத்துவ மனைகள் திறக்கிறுர்களே.

அண்ணன் : ஆம் தம்பீ ! மக்களுக்கு மருத்துவ உதவி யளிக்க வேண்டியது அவசிய மல்லவா ? அதனுல் தான் அரசினர் ஆங்காங்கு மருத்துவ மனைகளைத் தொடங்குகின்றனர்.

தம்பி : 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று நான் படித்திருக்கிறேன். அதன்படி நோய் இல்லாமல் இருப்பதல்லவா நல்லது ?

அண்ணன் : ஆமாம் ! அதுதான் சிறந்தது. ஆனுல் உணவில் ஏற்படும் குறைகளினுலோ, தூய்மைக் கேட்டினுலோ சில சமயம் மக்களுக்கு நோய் ஏற்பட்டு விடுகிறது. அப்பொழுது அதை மேலும் வளரவிடாமல் தடுத்து, குணப்படுத்த மருத்துவ மனைகள் தேவையல்லவா ?

தம்பி : மருத்துவ மனைகளில் எல்லாவித நோய்களுக்கும் மருத்துவம் செய்வார்களா ?

அண்ணன் : பொதுவாக எல்லா நோய்களுக்கும் மருத்துவ மனையில் மருந்து கொடுப்பார்கள். ஆயினும், காசம், குட்டம், அம்மை, காலரா போன்ற தொத்து நோய்களுக்கெனத் தனிப்பட்ட மருத்துவ மனைகளும் உள்ளன. இவைதவிர, குழந்தைப் பேறு மருத்துவ மனைகளும், கண் மருத்துவ மனைகளும் தனித்தனியாக உள்ளன.

தம்பி : நோயாளிகளின் தேவைகளை யெல்லாம் மருத்துவர்கள் தானே கவனிக்க வேண்டும் ?

அண்ணன் : அப்படி யல்ல. நோயாளிகளைக் கவனித்து மருந்து கொடுப்பதும், வேறு சிகிச்சைகள் செய்வதும் மருத்துவரின் வேலை. இவர்களைத் தவிர, மருத்துவ மனையில் வேறு பல வேலையாட்களும்

இருப்பர். நோயாளிகள் உள்ள இடமாதலால் மருத்துவ மனை மிகச் சுத்தமாக இருக்க வேண்டுமல்லவா? அதைக் கவனிக்கவும், நோயாளிகளுக்கு வேண்டிய உணவு வகைகளைத் தயாரித்துத் தரவும், மற்றும் வேறு பல வேலைகளுக்கும் ஆட்கள் பலர் உண்டு.

இவர்கள் தவிர நோயாளிகளைக் கவனித்து வேளை தவருமல் மருந்து தரவும், அவர்களுக்குத் தேவையான பிறவற்றைக் கவனிக்கவும் தாதிமார்களும் இருக்கின்றனர்.

தம்பி : நர்ஸ்களைத் தானே குறிப்பிடுகிறீர்கள்? எங்கள் வகுப்பு ஆசிரியர் கூட அவர்களைப் பற்றிச் சொல்லியுள்ளார். அவர்களது இன்முகமும் இனிமையான பேச்சுகளும், பரிவான உதவிகளும் நோயாளிகளுக்கு மிகவும் ஆறுதல் அளிக்கும் என்று அவர் கூறினர்.

அண்ணன் : ஆமாம்! அவர்கள் பகலும், இரவும் ஒருவர் மாறி ஒருவர் நோயாளிகள் உள்ள அறையில் இருந்து

அவர்களுக்கு அவ்வப்போது தேவையான உதவி களைச் செய்வர்.

தம்பி : நோயாளிகளெல்லாம் மருத்துவ மனையிலேயே தங்கி சிகிச்சை பெறுவார்கள் அல்லவா ?

அண்ணன் : அப்படி யல்ல. பெரிய மருத்துவ விடுதி களில்தான் நோயாளிகள் தங்க வசதிகள் உண்டு. அங்கும் அதிக நோய் உள்ளவர்களைத்தான் விடுதியில் தங்கச்செய்து சிகிச்சை செய்வார்கள். சாதாரண நோய்களுக்கு மருந்து கொடுத்து அனுப்பிவிடுவார் கள். அத்தகைய நோயாளிகள் தினமும் சென்று மருந்து வாங்கிக் கொள்வார்கள்.

தம்பி : மருந்து வாங்குவதற்கும், விடுதியில் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கும் கட்டணம் அதிகமாக இருக் குமே. அதை ஏழைகளால் எப்படித் தரமுடியும் ?

அண்ணன் : அரசினராலும், ஆட்சிக் கழகங்களாலும் நடத்தப்படும் மருத்துவ மனைகளில் ஏழைகளிடம் கட்டணமே வாங்க மாட்டார்கள். அதிக வருவாய் உள்ளவர்களிடமும், செல்வர்களிடமும்தான் கட்ட ணம் வசூலிப்பார்கள்.

தம்பி : இத்தகைய மருத்துவ மனைகளும், மருத்துவ விடுதிகளும் ஊர்தோறும் ஏற்படுத்தப்படுமானால் நம் நாட்டு மக்கள் மிக்க இன்பமாக வாழ்வார்களல்லவா ?

அண்ணன் : ஆமாம் தம்பி ! ஆயினும் இதைவிட முக் கியமானது மக்கள் நோயே வராமல் தடுக்கும் முறை யில் தங்கள் வாழ்க்கையை நடத்த வேண்டுமென்பது தான். அதில் அவர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். சரி, நேரமாகிறது. சாப்பிடப் போக லாம் வா.

பயிற்சி

1. விடை எழுது :

1. தனிப்பட்ட மருத்துவ மனைகள் எந்தெந்த நோய் களுக்கு உள்ளன ?

2. மருத்துவ மனையில் நோயாளிகளின் தேவைகளைக் கவனிப்பவர்கள் யாவர்?

3. தாதிமார்களின் கடமைகள் யாவை?

4. மருத்துவ மனைகள் ஏன் ஊர்தோறும் ஏற்பட வேண்டும்?

5. மருத்துவ மனையைப்பற்றி 15 வரிகளில் ஒரு கட்டுரை எழுது.

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது.

தூய்மைக் கேடு, தனிப்பட்ட, தவருமல், பிறவற்றை, பரிவான, ஒருவர் மாறி ஒருவர், ஊர்தோறும், தங்கச் செய்து.

3. கீழுள்ள எச்சத் தொடர்களை நிரப்பி முற்றுத் தொடர்களாக மாற்று:

1. அரசினர் மக்களுக்கு மருத்துவ உதவி அளிப்பதற்காக..............

2. நோய்களை வளரவிடாமல்..............

3. தாதிமார்கள் நோயாளிகளுக்கு வேண்டிய...............

4. சாதாரண நோய்களுக்கு...............

5. சில மருத்துவ மனைகளில் ஏழைகளிடம்..............

4. கீழுள்ள தன்வினைகளுக்குப் பிறவினை கூறு:

திறக்கிருர்கள், செய்வார்கள், சென்று, நடத்தவேண்டும், வா.

22. சிறுவர் பொறுப்பு (பாட்டு)

இன்று குழந்தைகள் நீங்கள்—எனினும்
இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்!
இன்று......

நன்றாய்ப் படியுங்கள்! நாட்டின் குழந்தைகாள்!
ஒன்றாய் இருங்கள் உயர்வினை எண்ணுங்கள்!
இன்று......

குன்றினைப் போல உடல்வன்மை வேண்டும்!
கொடுமை தீர்க்கப்போ ராடுதல் வேண்டும்!
தின்றதையே தின்று தெவிட்டுதல் இல்லாமல்
அன்றன்று வாழ்வில் புதுமைகாண வேண்டும்!
இன்று......

பல்கலை ஆய்ந்து தொழில்பல கற்றும்
பாட்டிற் சுவை காணும் திறமையும் உற்றும்
அல்லும் பகலும்இந் நாட்டுக் குழைப்பீர்கள்!
அறிவுடன் ஆண்மையைக் கூவி அழைப்பீர்கள்!
இன்று......

—புரட்சிக் கவிஞர்

பயிற்சி

1. அருஞ்சொற் பொருள்:

குன்று - மலை; வன்மை - வலிமை; பல்கலை - பலகலைகள்; ஆய்ந்து - ஆராய்ந்து; ஆண்மை - வீரம்.

2. சிறுவர்களின் பொறுப்பு யாது என்று கவிஞர் கூறுகிறார்?

23. கடல் வளம்

மாணவர்களே! நீங்கள் நீர்வளம், நிலவளம், காட்டு வளம் ஆகியவற்றைப்பற்றி முன்னதாகவே அறிந்திருக்கிறீர்கள். நீர்வளம் ஒரு நாட்டுக்கு மிகவும் இன்றியமையாதது என்றும் கற்றுள்ளீர்கள். கடல் வளம் என்ற இப் பாடத்தின் பெயரைப் பார்த்ததும் உங்களுக்கு என்ன எண்ணம் தோன்றியது? 'ஆறு, ஏரி, போன்ற நீர்நிலைகளாலும், நல்ல வயல்களாலும், காடுகளாலும் நமக்கு நன்மை பலவுண்டு; அதனுல் அவற்றை வளங்கள் என்கிருேம். ஆனுல் கடலால் நமக்கு என்ன நன்மை யிருக்கிறது' என்று நீங்கள் ஐயுறலாம். குடிப்பதற்கும் தகுதியற்ற நீரையுடைய கடலை ஏன் வளம் என்று கூற வேண்டும் என்றும் நீங்கள் வினவலாம்.

நீங்கள் எண்ணுவதுபோல் கடல் பயனற்றதல்ல. கடலால் நாம் பல நன்மைகளை அடைகிருேம். மழைப் பாடத்தில், நீர்நிலைகளிலுள்ள நீர் ஆவியாக மேலே சென்று குளிர்ந்த காற்றுப்பட்டதும் மழையாகப் பொழிகின்றது என்று படித்தீர்களல்லவா? நீர்நிலைகள் அனைத்திலும் மிகப் பெரியது கடல். உலகத்தின் நிலப்பகுதியைப் போல் கடல் பகுதி இரண்டு பங்கு உள்ளது. மழைக்கு வேண்டிய நீராவியில் மிகப் பெரும்பகுதி கடலிலிருந்து செல்வதுதான். எனவே, மழை பெய்வதற்கு முக்கிய காரணமாயிருப்பது கடல் என்று கூறலாம்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை,' 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்ற பழமொழிகளை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? நமது உணவுப் பொருள்களில் முக்கியமானது உப்பு. உப்பில்லா விட்டால் நாம் உணவைச் சுவையாக உண்ண முடியாது. இந்த உப்பு நமக்கு எங்கிருந்து கிடைக்கிறதென்று எண்ணுகிறீர்கள். கடல்நீரை, அதன் அருகிலுள்ள நிலங்களில் அமைக்கப் பட்டிருக்கும் பாத்திகளில் பாய்ச்சுவார்கள். அது தெளிந்த பிறகு மேலோடு வடிகட்டி விடுவார்கள். அடியில் உப்பு படிந்திருக்கும். அது நன்ருகக் காய்ந்த பிறகு

உப்பைச் சுரண்டி எடுத்துக் கொள்வார்கள். இதிலிருந்து நமக்கு உப்பளிக்கும் தாய் கடல் என்று தெரிகிறதல்லவா?

கடல், உணவுக்கு வேண்டிய உப்பைத் தருவதோடு உணவையும் நமக்குத் தருகிறது. நிலத்தில் கிடைக்கும் உணவுப் பொருள்களை மட்டும் மக்கள் உண்டு வந்தால் எல்லா மக்களுக்கும் நெடுங் காலத்திற்கு உணவு கிடைப்பது அரிதாகிவிடும். அப்பற்றுக் குறையைக் கடலிலிருந்து கிடைக்கும் மீன் உணவால்தான் ஈடு செய்து கொள்கிறோம். புலால் உண்ணும் பழக்கமுள்ளவர்களுக்கு மீன் முக்கியமான உணவாகின்றது. சிலவகை மீன்களிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கிறார்கள். பலம் குறைந்தவர்களும், நோயால் உடல் மெலிந்தவர்களும் அம்மீனெண்ணெயைக் குடித்து உடல் உரம் பெறுகிறார்கள்.

முத்துமாலையைப் பெண்கள் கழுத்தில் அணிவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்த முத்தும், பவழம் சங்கு போன்ற பிற பொருள்களும் கடலிலிருந்துதான் நமக்குக் கிடைக்கின்றன. பவழ மாலைகளும், சங்கு வளையல், சங்கு மோதிரம் ஆகியவைகளும் எவ்வளவு அழகாயிருக்கின்றன? இவ்வாறு நமக்கு வேண்டிய பல அழகுப் பொருள்களையும் கடல் நமக்குத் தந்து நம்மை மகிழ்விக்கிறது. பண்டைக்கால முதல் நம் தமிழ் நாட்டின் முத்துக்கு, உலக முழுவதிலும் நல்ல மதிப்பு உண்டு. தமிழர்கள் மிக ஆழமான கடலில் மூழ்கி முத்தெடுப்பதில் வல்லவர்கள். கடலில் முத்தெடுப்பதை 'முத்துக் குளித்தல்' என்பர்.

கடற்கரையில் உள்ள ஊர்களில் வாழும் மக்கள் மாலை நேரங்களில் கடற்கரைக்குச் சென்று உலாவி வருவது வழக்கம். ஏனென்றால், கடற்காற்று மிகவும் குளிர்ச்சியாக இருப்பதால் அது உடலில் பட்டால் மிக்க இன்பமாக இருக்கும். மேலும் கடலிலிருந்து குளிர்ந்த காற்று நிலத்தை நோக்கி வீசிக்கொண்டிருப்பதால், நிலத்தில் உள்ளவர்களுக்கு ஞாயிற்றின் வெப்பம் மிகுதியாகத் தெரியாது.

மற்றும் போக்குவரவுக்கும், வாணிபத்திற்கும் கடல் பேருதவி புரிகின்றது. வான ஊர்தி கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்வரை கடல் மூலமாகச் செல்லும் கப்பலூர்தியே மிகவும் சிறந்ததாகக் கருதப்பட்டது. வெளிநாடுகளுக்குத் தரைவழியாகச் சுற்றிச் சுற்றிச் செல்வதைவிட, கடலின் வழியாகக் கப்பலின் உதவியால் செல்வது எளிது. பண்டைக் காலத் தமிழ்நாட்டில் கடல் வாணிபம் சிறந்து விளங்கிற்று.

தென்னிந்தியாவின் மூன்று பக்கங்களிலும் கடல் இருக்கிறது. அதை மேலும்மேலும் பயன்படுத்திக் கொண்டால் நம் நாட்டு மக்கள் பலவகையிலும் சிறந்து வாழமுடியும்.

பயிற்சி

1. விடை எழுது :

1. கடலால் நாம் அடையும் நன்மைகள் யாவை?
2. உப்பை எப்படி எடுக்கிருர்கள்?
3. ‘முத்துக் குளித்தல்’ என்ருல் என்ன?
4. கப்பலூர்தி ஏன் சிறந்ததாகக் கருதப்பட்டது?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

பெரும்பகுதி, அரிதாகி, ஈடுசெய்து, பழக்கமுள்ள, வல்லவர்கள், மேலும் மேலும்.

3. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாகப் பொருத்தமான வேறு சொற்களை எழுது :

1. உங்களுக்கு என்ன **எண்ணம் தோன்றியது?**
2. இத்தண்ணீர் குடிப்பதற்குத் **தகுதியுடையதா** என்று **ஐயுற்றேன்.**
3. நீர்நிலைகள் **அனைத்திலும்** பெரியது கடல்.
4. மீன் உணவால் **ஈடு** செய்யலாம்.
5. **வாணிபத்திற்கும்** கடல் **பேருதவி** புரிகின்றது.

4. அவர் என் தாயார்.

இத்தொடரில் அவர் என்பது பன்மைபோல் தோன்றுகிறதல்லவா? இது பன்மைச் சொல்லல்ல. ஒருமைச் சொல்தான். உயர்வுக்காக ஒருமையைப் பன்மையாகக் கூறுவதுண்டு. அதற்கு **உயர்வுப் பன்மை** என்று பெயர்.

அப்பா! **அவர்** வந்தார்.

தாத்தா! **நீங்கள்** எங்கே செல்கிறீர்கள்?

இவற்றிலுள்ள அவர், நீங்கள் என்பன போல ஒருவரைக் குறித்து வருவன எல்லாம் உயர்வுப் பன்மைகளே.

24. சட்ட சபை

நமது நாடு குடியரசு நாடு. இது சில ஆண்டு களுக்கு முன்வரை முடியாட்சி நாடாக இருந்தது. அதாவது, முடிமன்னர் ஒருவரின் ஆட்சிக்கு உட்பட் டிருந்தது. பல அருந் தலைவர்களின் உழைப்பால் நமக் குச் சுதந்திரம் கிடைத்தது; முடியாட்சி மாறிக் குடி யாட்சி ஏற்பட்டது. குடியாட்சி என்ருல் மக்கள் தம்மைத் தாமே ஆண்டுகொள்ளுதல் என்பதாகும். ஆனல் மக்கள் எல்லோரும் ஆட்சி செய்தல் என்பது இயலக் கூடிய காரியமல்லவே. எனவே, மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஒரு சிலர் கூடி நாட்டிற்குத் தேவையான வற்றைச் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்து, அதனைச் சட்டமாக்குவர். அதன்படி ஆட்சி நடைபெறும்.

இவ்வாறு மாநில ஆட்சிக்குத் தேவையான சட்டங் களை இயற்றுவதற்காக மாநிலச் சட்ட சபைகள் இருக் கின்றன. சட்ட சபையில் இரு பிரிவுகள் உண்டு. அவை, கீழ்ச் சபை, மேற் சபை எனப்படும். சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய மாநிலங்களில் இருவகைச்

சபைகளும் இருக்கின்றன. சிறிய மாநிலங்களில் கீழ்ச் சபை மட்டுமே இருக்கும்.

கீழ்ச் சபையில் 500-க்கு மேற்படாத உறுப்பினர்கள் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் ஐந்து ஆண்டு காலம் பதவியில் இருக்கலாம். இந்தச் சட்டசபை உறுப் பினர்களைத்தான் சுருக்கமாக எம். எல். ஏ-க்கள் என்று கூறுகிறோம். இவர்கள் பொது மக்களின் நன்மைகளுக் காகப் பணி செய்வதால் மாதம் ஒன்றுக்கு நூற்றைம்பது ரூபாய்கள் ஊதியமாகப் பெறுகிறார்கள்.

கீழ்ச் சபை உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒரு தலை வரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். கீழ்ச் சபைத் தலைவருக்குச் சபாநாயகர் என்றும், துணைத் தலைவருக்கு உதவிச் சபாநாயகர் என்றும் பெயர்.

மேற்சபை உறுப்பினர்கள், கீழ்ச்சபை உறுப்பினர் களின் எண்ணிக்கையில் நாலில் ஒரு பங்கு பேர் தான் இருப்பர். இவர்களிலும் பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே. சிலர் மட்டும் மாநில ஆளுனரால் நியமிக் கப்படுவர். சமூகத் தொண்டு, இலக்கியம், கலை முதலிய வற்றில் நற்பெயர் பெற்றவர்களையே ஆளுனர் நியமிப்பார். இச்சபை உறுப்பினர்களும் தங்களுக்குள் ஒரு தலைவரை யும், துணைத் தலைவரையும் தேர்ந்தெடுத்துக் கொள் வார்கள்.

கீழ்ச் சபை, மேற் சபை ஆகிய இரு சபைகளுள்ளும் கீழ்ச் சபைக்கே அதிக அதிகாரம் உண்டு. கீழ்ச் சபை யில் தான் மாநிலத்தின் அரசியல் வரவு செலவு பற்றிய விவாதங்கள் நடைபெறும். கீழ்ச்சபை இயற்றும் சட்டங் களைத் தேவைப்படின் மேற்சபை திருத்தம் செய்யும். அத் திருத்தங்களை ஏற்கவும், மறுக்கவும் கீழ்ச்சபைக்கு உரிமை உண்டு.

சட்ட சபைகள் இயற்றும் சட்டங்கள் எல்லாம் உடனே செயல் முறைக்கு வந்துவிட முடியாது. அவற்றை மாநில ஆளுனர் அனுமதிக்க வேண்டும். தீர்மானிக்கப்பட்ட சட்டத்தினால் நாட்டின் நலன் பாதிக்

கப் படுமெனத் தோன்றின் ஆளுனர் அச்சட்டத்தைப் பற்றி மறுமுறையும் யோசித்துப் பார்த்து முடிவுக்கு வருமாறு திருப்பி விடுவார்.

நாம் நமக்குள் சிலரைத் தேர்ந்தெடுத்துச் சட்ட சபைக்கு உறுப்பினர்களாக அனுப்புகிறோம். அவர்கள் நாட்டுக்குத் தேவையான பல சட்டங்களை இயற்று கிறார்கள். அவற்றை, மாநில ஆளுனர் சம்மதித்ததும், நாட்டில் நடைமுறைக்குக் கொண்டு வருகின்றனர். எனவே, நாமே நமக்கு வேண்டிய சட்டங்களை இயற்றிக் கொள்வதால் நம்மை நாமே ஆண்டு கொள்கிறோம் என்று கூறுவது சரியல்லவா ?

பயிற்சி

1. விடை எழுது :

1. முடியாட்சி என்றால் என்ன ? குடியாட்சி என்றால் என்ன ?
2. சட்ட சபையின் இரு பிரிவுகள் யாவை ?
3. மேல் சபைக்கு எத்தகையோரை உறுப்பினராக ஆளுனர் நியமிப்பார் ?
4. சட்டசபை இயற்றும் சட்டங்கள் எப்போது செயல் முறைக்கு வரும் ?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

தம்மைத் தாமே, இயலக் கூடிய, இயற்றுவதற்காக, பெரும்பாலோர், விவாதங்கள்.

3. கீழுள்ள எச்சத் தொடர்களை முற்றுத் தொடர்களாக மாற்று :

1. குடியாட்சி என்றால்..................
2. கீழ்ச்சபை உறுப்பினர்கள் தங்களுக்குள்...........
3. மேல் சபையை விட............
4. சட்டசபைகள் இயற்றும் சட்டங்களை............
5. சட்டசபை உறுப்பினர்கள் பொது மக்களின்.........

4. இப்பாடத்திலிருந்து பத்து வினைச் சொற்களை எடுத்து, அவற்றிற்கு முக்கால வினைச்சொற்களும் கூறு.

25. உயிர்க் கொடை

மாஸ்கோ நகரில் ஒரு பெருஞ் செல்வர் வாழ்ந்து வந்தார். அவர் ஒரு சமயம் நெடுந் தொலைவிலுள்ள தம் உறவினர் ஒருவரைக் காணத் தன் குடும்பத்துடன் சென்றார். அவர்கள் மிக வேகமாகச் செல்லக் கூடிய நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியொன்றில் ஏறிச் சென்றனர். வண்டியோட்டி, வண்டியோட்டுவதில் மிக்க திறமைசாலி; தன் தலைவனிடம் மிக்க அன்பு கொண்டவன்.

வண்டி ஒரு பெருங் காட்டைக் கடந்து செல்ல வேண்டி யிருந்தது. கொடிய விலங்குகளால் வழியில் துன்பம் நேரிடுமோ என்ற அச்சம் வண்டியோட்டிக்கு இருந்தது. எனவே, அவன் குதிரைகளை வேகமாகச் செலுத்தினான். அவன் அச்சத்திற்கேற்ப ஓநாய்களின் பெருங்கூட்ட மொன்று வண்டியைத் துரத்தி வருவதைக் கண்டான். அவைகளிடம் சிக்கினால் அனைவரும் அவைகளுக்கு இரையாக நேரிடும். எனவே வண்டியிலிருந்தோர் நடுநடுங்கினர்.

வண்டியோட்டி சிறிதும் தாமதியாது, வண்டியில் பூட்டியிருந்த நான்கு குதிரைகளுள் ஒன்றினை அவிழ்த்து விட்டுவிட்டு, வண்டியை இன்னும் வேகமாகச் செலுத்தத் தொடங்கினான். அவிழ்த்து விடப்பட்ட குதிரையை ஓநாய்கள் துரத்திச் சென்று, அதனைக் கொன்று தின்ன ஆரம்பித்தன.

குதிரையைத் தின்று முடித்து ஓநாய்கள் மறுபடியும் வண்டியைத் தொடர்வதற்குமுன், காட்டைக் கடக்க வேண்டுமென்று வண்டியோட்டி எவ்வளவு முயன்றும் இயலாமற் போயிற்று. ஓநாய்க் கூட்டம் மறுபடியும் வண்டியைத் துரத்தி வந்தது. எனவே, மற்றொரு குதிரையையும் வண்டியிலிருந்து அவிழ்த்து விட்டுவிட்டு, வண்டியை ஓட்டினான். இம்முறையும் ஓநாய்கள் அக் குதிரையைத் தின்றுவிட்டு, மீண்டும் வண்டியைத் துரத்தத் தொடங்கின.

ஓநாய்க் கூட்டம் நெருங்குவதைக் கண்ட வண்டி யோட்டி, வேறு வழியின்றி மற்றும் ஒரு குதிரையை அவிழ்த்து விட்டான். எஞ்சியிருந்த ஒரே குதிரையுடன் வண்டியைக் கூடுமான அளவு வேகத்துடன் செலுத் தினன். எவ்வாறேனும் காட்டைக் கடந்து விட்டால்



ஓநாய்களிடமிருந்து தப்பலாம் என்பதே அவனது எண்ணமாகும்.

மூன்று குதிரைகளைத் தின்ற பிறகும் ஓநாய்களின் பசி தணியவில்லை. அவை மறுபடியும் வண்டியைத் துரத்தின. வண்டியோட்டி அதனைக் கண்டு அச்சம் மிகக் கொண்டான். வண்டியில் ஒரே குதிரை இருப்பதால் அதை அவிழ்த்து விட்டால் வண்டியைச் செலுத்தவே முடியாது. அன்றி, காலம் சிறிது தாழ்த்தினுலும் ஓநாய் கள் நெருங்கி வந்து அனைவர் மீதும் பாய்ந்து கொன்று விடும். வண்டியில் இருந்த செல்வருக்கும் என்ன செய்வ தென்று புரியவில்லை.

வண்டியோட்டி தன் கையில் பற்றியிருந்த குதிரை யின் சேணக் கயிற்றைச் செல்வரிடம் கொடுத்தான்; "இதைத் தாங்கள் பிடித்துக் கொண்டு முடிந்த அளவு

விரைவுடன் குதிரையை ஓட்டுங்கள். எப்படியும் காட்டைக் கடக்க முயற்சி செய்யுங்கள்'' என்று கூறினுன். செல்வர் சிந்திப்பதற்கு நேரம் சிறிதும் அளிக்காமல் வண்டியிலிருந்து கீழே குதித்து விட்டான். ஓநாய்கள் அவன் மீது பாய்ந்து அவனைக் கொன்று விட்டன; அவனது உடலைத் தின்னத் தொடங்கின.

இதற்கிடையில் வண்டி காட்டைக் கடந்து விட்டது. ஓநாய்களின் தொல்லை நீங்கியது. செல்வரும் அவரது குடும்பத்தினரும் உயிர் தப்பினர். அவர்களைக் காப்பதற்காக வண்டிக்காரன் தன் உயிரையே கொடுத்தான். அவன் அவ்வாறு செய்ததற்குக் காரணம் வெறும் கடமை உணர்ச்சி மட்டுமல்ல; தன் தலைவனிடம் அவன் கொண்டிருந்த அன்பும் காரணமாகும். தன் அன்பிற்கு அறிகுறியாக அவன் தன் உயிரையே நன்கொடையாக அளித்தான் என்று கூறுவது பொருந்துமல்லவா?

பயிற்சி

1. விடை எழுது :

1. ஓநாய்கள் துரத்துவதைக் கண்டு வண்டியிலிருந்தோர் ஏன் நடுங்கினர்?

2. வண்டியோட்டி ஓநாய்களிடமிருந்து ஏன் தப்ப நினைத்தான்?

3. வண்டியோட்டி ஒவ்வொரு குதிரையாக ஏன் அவிழ்த்து விட்டான்?

4. வண்டியோட்டி கடைசிக் குதிரையை ஏன் அவிழ்த்து விடவில்லை? பதிலுக்கு என்ன செய்தான்?

5. வண்டியோட்டி தன் தலைவனிடம் கொண்டிருந்த அன்பு எவ்வாறு தெரிகிறது?

2. கீழுள்ள சொற்களைத் தொடர்களில் அமைத்து எழுது :

செல்லக்கூடிய, நடுநடுங்கினர், தொடர்வதற்குமுன், வேறு வழியின்றி, கூடுமான அளவு, எவ்வாறேனும், இதற்கிடையில், கடமை உணர்ச்சி.

3. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்குப் பதிலாக வேறு தக்க சொற்களை எழுது :

1. தம் **உறவினர்** ஒருவரைக் **காணச்** சென்றார்.
2. **விலங்குகளைப்** பற்றிய **அச்சம்** ஏற்பட்டது.
3. வண்டியை வேகமாகச் **செலுத்தத்** தொடங்கினான்.
4. ஓநாய்களின் பசி **தணியவில்லை.**
5. **செல்வர் சிந்திப்பதற்கு** நேரம் சிறிதும் **அளிக்கவில்லை.**

4. இப்பாடத்திலிருந்து அறுவகைப் பெயருக்கும் இரண்டிரண்டு சொற்கள் எடுத்தெழுது.

26. கள்ளக் குள்ளன் (பாட்டு)

காரிருள் சூழ்ந்து மக்கள் கண்ணயர்ந்
துறங்கும் நேரம்,
ஓரிரு நரிகள் கூடி ஊளையிட்
டுலாவும் நேரம்,
ஏரியில் தவளைக் கூட்டம் தணதண
தத்தோம் என்று
பேரிகை கொட்டி ஆடிப் பேரிசை
பாடும் நேரம். 1

ஆந்தையும் கண்ணை மூடி அலறிடா
துறங்கும் போது
பேந்தையூர்க் குள்ளன் மட்டும் பெருவிழி
மூடா னாகி
வேந்தனின் வீட்டுத் தோட்ட வேலியைத்
தாண்டிச் சென்று
ஏந்திள நீரைக் கொள்ள ஏறினான்
தென்னை ஒன்றில். 2

"யாரடா?" என்னக் கேட்டு இறங்கிடும்
குள்ளன் தன்னைக்
காருடல் வேந்தன் ஓடிக் காலினைப்
பிடித்துக் கொண்டு'
"யாரடா? எங்கு வந்தாய்?" என்னவும்
அந்தக் கள்ளன்
"காரியின் காய்ச்சல்தீரக் கணங்குழை
பிடுங்க" என்றான். 3

"கணங்குழை தென்னை மீது கண்டதும்
உண்டோ?" என்ன,
"கணங்குழை அங்கு காணேன், ஆதலால்
இறங்கு கின்றேன்;

பிணங்கிய அண்ணு உன்றன் பெருங்குரல்
கேட்டு நானும்
வணங்கினேன்'' என்று கூறி ஓடினுன்
கள்ளக் குள்ளன். 4

—நன்னன்

பயிற்சி

1. அருஞ்சொற்பொருள் :

காரிருள் - கரிய இருள் ; பேரிகை - முரசு ; பேரிசை - பெரிய இசை ; மூடாஞகி - மூடாமல் ; வேந்தன் - தோட்டக்காரனின் பெயர் ; ஏந்திளநீர் - தென்னை ஏந்தியுள்ள இளநீர் ; கொள்ள - பறிக்க ; காருடல் - கரிய உடல் ; காரி - கறுப்புப் பசு ; கணங் குழை - ஒருவகைப் புல் ; பிணங்கிய - சினமுற்ற.

2. விடை எழுது:

1. இரவு நேரம் எப்படிப்பட்டது?
2. குள்ளன் வேந்தனின் தோட்டத்திற்கு ஏன் போனுன்?
3. குள்ளனும் வேந்தனும் என்னென்ன பேசிக் கொண்டனர் ?

3. கீழுள்ள பத்தியிலுள்ள தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுது :

நேற்று இரவு வேந்தன் வீட்டுத் தென்னை மரத்தில் ஒரு கள்வன் ஏறுவான். அதை மரத்துக்காரன் காண்கிருன். ஏண்டா மரத்தின்மேல் ஏறினீர் என்று மரத்துக்காரன் கேட்பான். திருடன் புல் பிடுங்க ஏறுவேன் என்றீர். தென்னை மரத்தில் புல் இருப்பாரா என்று அவன் கேட்டது. அதனுல்தான் இறங்குவேன் என்று திருடன் பதில் கூறினுள்.

27. கள்வன் யார்?

காட்சி 1

[காவிரிப் பூம்பட்டினத்திலிருந்து வந்த கோவலன் தன் மனைவி கண்ணகியின் சிலம்புகளில் ஒன்றை விற்பதற்காக மதுரைக் கடைத் தெருவில் சென்று கொண்டிருக்கிறான். அரண்மனையில் நகைகள் செய்யும் பொற்கொல்லன், அவன் எதிரில் வருகிறான்.]

கோவலன் : ஐயா! வணக்கம். நான் இச்சிலம்பை விற்க விரும்புகிறேன். அரசரைத் தவிர வேறு யாரும் இதை வாங்க மாட்டார்கள் என்று கூறுகிறார்கள். தாங்கள் இதனை விற்றுத் தர முடியுமா?

பொற்கொல்லன் : (சிலம்பைக் கையில் வாங்கி உற்றுப் பார்த்துவிட்டு திருட்டுச் சிரிப்புடன்) நான் அரண்மனைப் பொற்கொல்லன். இதோ இருப்பதுதான் என் வீடு. நீங்கள் இங்கேயே இருங்கள். நான் அரசரிடம் சென்று கூறி, விலை பேசி வருகிறேன்.

(கோவலன், பொற்கொல்லன் வீட்டுத் திண்ணையில் உட்காருகிறான். பொற்கொல்லன் அரண்மனைக்குச் செல்கிறான். அரசன் ஏதோ அவசரமாகவும், வருத்தமாகவும் சென்று கொண்டிருக்கிறான்.)

பொற் கொல்லன் : மன்னர் மன்னா! மன்னிக்க வேண்டும். நம் பேரரசியாரின் சிலம்பைத் திருடிய கள்வன் அகப்பட்டுக் கொண்டான். (கூறிக்கொண்டே அரசனை வணங்குகிறான்.)

அரசன் : யார் அக்கள்வன்? அவன் எங்கே யிருக்கிறான்?

பொற் கொல்லன் : அரசே! அவன் என் வீட்டில் இருக்கிறான்.

அரசன் : ஆ! என்ன ஆச்சரியம்! நீ யல்லவா திருடியிருக்க வேண்டுமென்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

பொற்கொல்லன் : தங்கள் அரண்மனைச் சோற்றைத் தின்று வளர்ந்த இந்த நாய் அப்படியெல்லாம் செய்யாது, மன்னவா !

அரசன் : நான் தவறுதலாக உன்மீது சந்தேகப்பட்டு விட்டேன். இப்போதுதான் உண்மை புரிகிறது. நான் அவசரமாகப் போகவேண்டும். இதைப் பற்றி யோசிக்கவும் நேரமில்லை. சரி, காவலா ! (காவலன் ஓடிவருதல்) இவருடன் சென்று, இவர் காட்டும் கள்வனைக் கொன்று, அவனிடமுள்ள நம் அரசியின் சிலம்பைக் கொண்டு வா.

(காவலன் வணங்கி விட்டுப் பொற்கொல்லனுடன் செல்கிருன். கோவலன் கொல்லப்படுகிருன்.)

காட்சி 2

[அரசன் முன் கண்ணகி தனது மற்ருெரு சிலம்புடன் தலை விரி கோலமாய் நின்று கொண்டிருக்கிருள்.]

அரசன் : மிக்க துயரத்துடன் என்னைக் காண வந்துள்ள பெண்ணே ! நீ யாரம்மா ? உன் பெயரென்ன ? உனக்கு என்ன குறை நேர்ந்தது.

கண்ணகி : அவசர புத்தியுள்ள அரசனே ! சற்று முன் உன்ஞல் அநியாயமாகக் கொல்லப்பட்ட கோவலனின் மனைவி நான். என் பெயர் கண்ணகி.

அரசன் : பெண்மணியே ! கள்வனைக் கொல்வது தவறல்லவே. அதுதானே அரசனுக்கு அறம்.

கண்ணகி : யார் கள்வன் ? என் கணவரா ? யார் சொன்ஞர்கள் ? எப்படி அறிந்தாய் அவர் கள்வரென்பதை ? கூறு மன்ஞ, கூறு ? அவருடைய கள்ளங் கபடமற்ற தெளிந்த முகத்தை நீ பார்த்தாயா ? அவருடைய நேர்மையான விழிகளை நீ நோக்கிஞயா ? அவரது இனிய மொழிகளை நீ கேட்டாயா ? எப்படி அவர் கள்வர் என்று முடிவு கட்டிஞய் ?

அரசன் : பெண்கள் திலகமே! துன்ப மிகுதியால் நீ பதட்டமாகப் பேசுகிருய். உன் துயரத்தைக் காண

என் நெஞ்சமும் பதறுகிறது. என்ன செய்யலாம்? குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விடுவது அற மாகாதே.

கண்ணகி: உனது அறவுரைகள் எனக்கு வேண்டாம். என் கணவரைக் கள்வர் என்று காட்டிய ஆதாரம் யாது? அதனைக் கூற வேண்டும்.

அரசன்: அம்மா கண்ணகி! இதோ இருக்கிறது உன் கணவனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பு. இது என் மனைவியின் சிலம்பு. எனவே, கையும் களவுமாகப் பிடித்துவிட்ட பிறகு வேறு ஆராய்ச்சி ஏன்? அதனால் தான் நான் அவனைக் கொலை செய்யச் சொன்னேன்.

கண்ணகி: அது உன் மனைவியின் சிலம்பா? அல்ல! அல்ல! நிச்சயமாக அல்ல. அது என்னுடைய சிலம்பே. அதன் இணையான மற்றொரு சிலம்பும் இதோ இருக்கிறது. என் சிலம்புகளில் மாணிக்கக் கற்கள் பரல்களாக இடப்பட்டுள்ளன.

அரசன் : நல்லது நங்கையே! என் சிலம்புகளில் முத்துப் பரல்கள்தான் உள்ளன. அச் சிலம்பை இப்போதே உடைத்துப் பார்த்தால் உண்மை வெளியாகிவிடும்.

(அச்சிலம்பை எடுத்துப் பெருஞ் சீற்றத்துடன் கண்ணகி கீழே அடித்து உடைக்கிருள். அதன் உள்ளிருந்த மாணிக்கப் பரல்கள் நாற்றிசையிலும் சிதறியோடுகின்றன. ஒரு மாணிக்கக் கல் அரசனின் வாயில் போய் அடித்து விழுகிறது.)

அரசன் : (உண்மையை உணர்ந்து திடுக்கிட்டு அறிவு கலங்கி) யார் சிலம்பு திருடிய கள்வன்? கோவலனு? பொற் கொல்லனு? அல்ல! அல்ல! நானேதான். கோவலனை ஆராயாது கொன்ற நானு அரசன்? நான்தான் கள்வன். இம் மாபெரும் கேட்டைச் செய்த என் உயிர் அழிக. (என்று கூறிக்கொண்டே கீழே விழுந்து இறக்கிருன்.)

பயிற்சி

1. விடை எழுது :

1. அரசன் ஆராயாது செய்த தவறு யாது?
2. சிலம்பு அரசியுடைய தல்ல என்று கண்ணகி எவ்வாறு அறியச் செய்தாள்?
3. தவற்றை யுணர்ந்த அரசன் என்ன செய்தான்?

2. நீங்கள் உங்கள் நண்பர்களுடன் சேர்ந்து இந் நாடகத்தை நடித்துப் பாருங்கள்.

செய்யுட் பகுதி

1. வாழ்க தமிழ்!

வாழ்க தமிழ் ! வாழ்க தமிழ் ! ! என்று வாழ்த்துவோம்.
வானும் உலகும் உள்ளளவும் வாழ்க செந்தமிழ் !
மூன்று சங்கம் ஈன்ற எங்கள் அன்னை வாழ்கவே
முப்பாலும் ஈன்று உயர்வுகொண்ட தாய்நீ வாழ்கவே !
வாடிடாத கவிதைமாலை சூட்டி வாழ்த்துவோம்
வையம் போற்றும் எங்கள் அன்னை வாழ்க வாழ்கென்றே !
உடலினிலே உலவுமுயிர் எங்கள் செந்தமிழ்
ஊறு செய்ய யார் வந்தாலும் தடுத்து நிறுத்துவோம்.

—அ. ச. நடராசன்.

2. இயற்கை வாழ்வு

பறந்து பறந்தெங்கும்—திரியும்
பறவை வாழ்வினைப் போல்
சிறந்த வாழ்வேதும்—இந்தச்
செகத்தில் கண்டதுண்டோ ? 1

சாதிச் சண்டையில்லை—ஓயாச்
சமயச் சண்டையில்லை
வேத சாத்திரங்கள்—கூறும்
விதி விலக்குமில்லை. 2

தோட்டி களுமில்லை—உயர்ந்த
தொண்டை மானுமில்லை
கோட்டை வீடுமில்லை—எளிய
குடி யிருப்பு மில்லை. 3

குடி கெடுத்து விட்டுப்—பழிகள்
கோடி செய்து விட்டுக்
கடவுளை வணங்கி—நிதமும்
கண்ணீர் விடுவதில்லை. 4

நீதி மன்றமில்லை—முழங்கும்
நியாய வாதியில்லை
பாதி முதல்தனையும்—வழக்கில்
பறி கொடுப்பதில்லை. 5

நாளைக் கில்லையென—இன்று
நைந்து நொந்துருகி
மூளை கலங்கியே—இருந்து
முணுமு ணுப்பதில்லை. 6

அச்சக் கும்பிடில்லை—நடிக்கும்
அன்புக் கும்பிடில்லை
பிச்சை யெடுப்பில்லை—காட்டும்
பித்த லாட்டமில்லை. 7

இரப்ப வருமில்லை—சோம்பி
இருப்ப வருமில்லை
புரப்ப வருமில்லை—அவரைப்
புகழு வாருமில்லை. 8

உள்ள துள்ளபடி—பேசி
உலகில் வாழ்ந்திடலாம்
கள்ளம் கபடுகள்—இன்றிக்
காலம் போக்கிடலாம். 9

புவியிற் பகலெலாம்—உணவு
பொறுக்கி உண்டிடலாம்
கவலை யற்றிரவில்—நன்றாய்க்
கண்ணுறங் கிடலாம். 10

கனி கனிந்துதிரும்—சோலை
கண்டு தங்கிடலாம்
இனிய கீதங்கள்—பாடி
என்றும் வாழ்ந்திடலாம். 11

தேரும் பொதுவுடைமை—ருஷிய
தேசத்தி லுள்ளதெல்லாம்
பாரிற் பறவைகளைக்—கண்டு
படித்த பாடமேயாம். 12

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

3. நீதி வெண்பா

வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல்லாம் திரிந்து
தாழுமவர் தம்மடிக்கீழ்த் தான். 1

கொம்புளதற்(கு) ஐந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக்(கு) ஆயிரந்தான் வேண்டுமே—வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. 2

கர்ப்பூரம் போலக் கடலுப்(பு) இருந்தாலும்
கர்ப்பூரம் ஆமோ கடலுப்புப்—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியர் ஆவாரோ புகல். 3

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலின் ஓர்
நற்புதல்வனைப் பெறுதல் நன்றாமே—பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததனுல் ஏதுபயன்
ஒன்றமையா தோகரிக்(கு) என்று ஓது. 4

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 5

தீயவர்பால் கல்வி சிறந்தாலும் மற்றவரைத்
தூயவரென்(று) எண்ணியே துன்னற்க—சேயிழையே
தண்ணொளிய மாணிக்கஞ் சர்ப்பந் தரித்தாலும்
நண்ணுவரோ மற்றதனை நாடு. 6

ஈக்கு விடம்தலையில் எய்துமிருந் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே ;—நோக்கரிய
பைங்கணர வுக்குவிடம் பல்லளவே; துர்ச்சனருக்(கு)
அங்கமுழு தும்விடமே யாம். 7

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே ;—வெற்றிபெ
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன் [றும்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி. 8

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரிலவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே ;—நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் ஆன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ ? பார். 9

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர் 10
வெண்ணிலா ஆமோ ? விளம்பு.

—பிற்காலப் புலவர் ஒருவர்

4. நன்னெறி

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள் கொடுப்பார் தீதற்றோர்—துன்று சுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற்(கு) உதவும் நயந்து. 1

நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 2

உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணம்(எ)ன்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 3

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைத் தீர்க்கிற்பார் விழுமியோர் ;—திங்கள்
கறைஇருளை நீக்கக் கருதா(து) உலகில்
நிறைஇருளை நீக்கும்மேல் நின்று. 4

தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர்—தம்மின்
இழியினுஞ் செல்வர் ; இடர்தீர்ப்பர். அல்கு
கழியினுஞ் செல்லாதோ கடல். 5

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந்(து) என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ—பைந்தொடீஇ !
நின்று பயனுதவி நில்லா அரம்பையின் கீழ்க்
கன்றும் உதவும் கனி. 6

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே ;—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். 7

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண்(டு) உள்ளம்,
எரியின் இழுதாவர் என்க ;—தெரியிழாய் !
மண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 8

கைம்மா(று) உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாம்செய்வர் ;—அம்மா !
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. 9

நல்லோர் வரவால் நகைமுகம்கொண்(டு) இன்புறீஇ
அல்லோர் வரவால் அழுங்குவார்—வல்லோர்
திருந்தும் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்தும் சுழல்கால் வர. 10

—சிவப்பிரகாச சுவாமிகள்

5. விவேக சிந்தாமணி

கல்வி

வெள்ளத்தே போகாது வெந்தழலில்
வேகாது ; வேந்த ராலும்
கொள்ளத்தான் முடியாது ; கொடுத்தாலும்
நிறைவன்றிக் குறைவு றுது ;
கள்ளர்க்கோ மிக அரிது, காவலோ
மிகஎளிது, கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க ஊரெல்லாம்
பொருள் தேடி உழல்வ தென்னே !

6. விகடராமன் குதிரை

முன்னே கடிவாளம் மூன்றுபேர் தொட்டிழுக்கப்
பின்னே இருந்திரண்டு பேர்தள்ள—எந்நேரம்
வேதம்போம் வாயான் விகடராமன் குதிரை
மாதம்போம் காத வழி.

—காளமேகப் புலவர்

செய்யுட் பகுதி

குறிப்புரை

1. வாழ்க தமிழ் :

உள்ளளவும் - இருக்கும் வரையில் ; முப்பால் - திருக்குறள் ; கவிதை மாலை - பாட்டாகிய மாலை ; வையம் - உலகம் ; ஊறு - இடையூறு.

2. இயற்கை வாழ்வு :

செகத்தில் - உலகத்தில் ; சமயம் - மதம் ; தொண்டைமான் - அரசன் ; குடியிருப்பு - வீடு ; நியாயவாதி - வக்கீல் ; முதல் - சொத்து ; புரப்பவர் - காப்பவர் ; புவியில் - மண்ணில் ; கனிந்து - பழுத்து ; கீதங்கள் - பாட்டுகள் ; பாரில் - உலகில்.

3. நீதி வெண்பா :

1. வளைவேய் - வளைந்த மூங்கில் ; வேழம்பர் - கழைக் கூத்தாடிகள்.

2. கொம்புளது - மாடு முதலிய கொம்புள்ள விலங்குகள் ; வெம்பு கரிக்கு - மத யானைக்கு ; பம்பு செறி - வம்பு மிக்க.

3. பொற்பு ஊறும் - அழகு மிகும் ; புல்லியர் - அற்பர் ; புகல் - சொல்.

4. பொற்பறிவு - அழகிய அறிவு ; பொற்கொடியே - அழகிய கொடி போன்றவளே ; பயந்ததனால் - பெற்றதனால் ; அமையாதோ - போதாதோ ; கரிக்கு - யானைக்கு.

5. சின்னம்பட - சிதைவடைய ; நலிந்தாலும் - வாடினாலும் ; நயந்து - விருப்புடன்.

6. துன்னற்க - நெருங்க வேண்டாம் ; சேயிழையே - செம்மையான ஆபரணங்களை உடையவளே ; சர்ப்பம் - பாம்பு ; நண்ணுவரோ - நெருங்குவார்களோ ; நாடு - ஆராய்ந்து பார்.

7. இரும் - பெரிய ; வாய்த்த - பொருந்திய ; நோக்கரிய - பார்த்தற்கரிய ; பைங்கண் - பசிய கண் ; துர்ச்சனர் - கொடியவர்கள்.

8. ஆன்றமைந்த முற்றுணர்வோர் - நிறையக் கற்று அடங்கியுள்ள முழு அறிவுடையவர்கள் ; ஒண் - ஒளி.

9. நிந்தை - பழி ; தாலம் - பனைமரம் ; ஆன் - பசு.

10. காதலித்து - அன்பு செய்து ; மானுவரோ - ஒப்பரோ ; வான்மீன் - நட்சத்திரம் ; இலகிடினும் - விளங்கினுலும் ; விளம்பு - சொல்.

4. நன்னெறி :

1. முகமன் - உபசார வார்த்தைகள் ; இயம்பாதவர் - சொல்லாதவர் ; சென்று - வலியச் சென்று ; பூம் கை - அழகிய கை.

2. நீக்கம் அறும் - நீங்காத ; நோக்கின் - ஆராயின் ; நொய் தாகும் - கீழானதாகும் ; குழலாய் - கூந்தலை யுடையவளே ; பழமைபோல் - முன்போல ; புல்லினும் - சேர்ந்தாலும்.

3. ஓங்கு சினம் - மிகுகின்ற கோபம் ; தடங்கரை - பெரிய கரை ; பேர்த்து - பெயர்த்து.

4. தீர்வு உள்ளார் - நீக்குவதை நினைக்காமல் ; வெங்குறை - கொடிய துன்பத்தை ; தீர்க்கிற்பார் - தீர்ப்பர் ; விழுமியோர் - பெரியோர் ; கறைஇருள் - கறையாகிய களங்கம்.

5. தம்மை மதியார் - தம் பெருமைகளைப் பெரிதாக எண்ணுமல் ; இழியினும் - இழிந்தவராயினும் ; அல்கு - குறுகிய ; கழி- உப்பங்கழி.

6. நல்கூர்ந்தான் - வறியவனுனன் ; இரப்பார்க்கு - யாசிப் பவர்களுக்கு ; ஈகை - கொடுப்பதை ; பைந்தொடி - அழகிய வளை யல்களை உடையவளே ; அரம்பை - வாழை.

7. இருநீர் - கடல் சூழ்ந்த ; வியன் - அகன்ற ; வன்சொல் - கடுஞ்சொல் ; பொன்செய் - பொன்னுல் செய்யப்பட்ட ; அதிர் - ஒலிக்கின்ற ; வளையாய் - வளையலை அணிந்துள்ளவளே ; அழல் கதிரால் - சுடுகின்ற சூரியனுல் ; தண்ணென் கதிர் - குளிர்ந்த கதிர்களையுடைய திங்கள்.

8. எரியின் இழுதாவர் - தீயில் இடப்பட்ட நெய் விழுதைப் போல் மனம் உருகுவர் ; தெரியிழாய் - ஆராய்ந்தெடுத்த அணி கலன்களை அணிந்தவளே ; மண்டு - மிக்க ; கலுழும் - அழும்.

9. கைம்மாறு - பதில் உதவியை ; உகவாமல் - விரும்பாமல் ; மெய் - உடல் ; இயல் - முடிந்த ; எயிறு - பல் ; வலியன - வன்மையான தின்பண்டங்களை.

10. வரவால் - வருகையால் ; இன்புறீ - இன்புற்று ; அல்லோர் - தீயோர் ; அழுங்குவார் - மனம் வருந்துவர் ; திருந்தும் - அழகுடன் விளங்கும் ; தேமா - இனிமையான மாமரம் ; சுழல் கால் - சுழல் காற்று.

5. விவேகசிந்தாமணி :

வெள்ளத்தே - ஆற்று வெள்ளத்தில் ; போகாது - அடித்துச் செல்லப்படமாட்டாது ; வெந்தழல் - வெம்மையான நெருப்பு ; உள்ளத்தே - மனதில் ; உழல்வது - வருந்துவது.

6. விகடராமன் குதிரை :

தொட்டு இழுக்க - பிடித்து இழுக்க ; வேதம் போம் - வேதத்தை ஒலிக்கின்ற ; காதம் - பத்து மைல்.

TB 031(52) N57

கன்னிமாரா பொது நூலகம் சென்னை-600 008

133667

RDR/1166